விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 046 வள்ளுவர் ஆண்டு 2053 தை 21 வியாழக்கிழமை (03.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/- + 500/-

பருத்தித்துறை பிரதேச செயலகம் முற்றுகை

## இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டித்து நேற்றும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதேச செயலகத்தை முற்றுகையிட்டு நேற்றைய தினம் மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

அண்மையில் வத்திராயன் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர்களின் உயிரிழப்புக்கு நீதி கோரியும் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராகவும் இந்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது பிரதேச செயலகத்தின் இரண்டு வாசல்களையும் முடக்கி அதற்கு முன்பாக அமர்ந்திருந்து மீனவர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

இதனால் பிரதேச செயலகத்தின் நேற்றைய செயற்பாடுகள் யாவும் பாதிக்கப்பட்டிருந்தன.

அத்தோடு யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியையும்

15

## எழுத்து மூலமான உத்தரவு தரும் வரை

மீனவர்களின் போராட்டம் தொடரும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி வரும் இந்தியப் ப்டகுகளை நிரந்தரமாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனும் உத்தரவை தகுதி வாய்ந்த அதிகாரிகள் எழுத்து மூலமாக தரும் வரை தமது போராட்டம் தொடரும் என மீனவர்கள் தெரி

15

3ஆவது நாளாகவும் மீனவர்கள்

## வீதி மறியல் போராட்டம்



(15ஆம் பக்கம் பார்க்க)

அனைத்து பாடசாலைகளுக்கும்

## உயர்தரப் பரீட்சை காலப்பகுதியில் விடுமுறை

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சைக் காலப்பகுதியில் அரச மற்றும் அரச அனுசரணை பெற்ற தனியார் பாடசாலைகளுக்கும் விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் 07 ஆம் திகதி முதல் எதிர்

15

மீனவர் பிரச்சினை தொடர்பாக

# பேச்சுவார்த்தை நடத்த தமிழகம் வாருங்கள்

தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்களுக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அழைப்பு



*(யாழ்ப்பாணம்)*

**தமிழக - வடபகுதி மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த தமிழ்நாட்டுக்கு வருகைதருமாறு தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்களுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளார்.**

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை

15

சுதந்திர தினத்தன்று

## மதுபான, இறைச்சி கடைகளுக்கு பூட்டு

(கொழும்பு)

74 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு அனைத்து உரிமம் பெற்ற மதுபானசாலைகள் மற்றும் இறைச்சிக் கடைகள் நாளையதினம் மூடப்படும் என்று உள்துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.

15

## "ஹபாயா விவகாரம்"

அதிபரைத் தாக்கிய ஆசிரியை

திருமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் களேபரம்

(05 ஆம் பக்கம் பார்க்க)

முல்லை. குருந்தூர் மலை அடிவாரத்தில்

## தமிழர்களின் சொந்த வயல் நிலத்தில் பயிர்செய்ய பௌத்த பிக்கு தடை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு குமுழமுனை குருந்தூர் மலை அடிவாரத்தில் உள்ள தண்ணிமுறிப்பு, குமுழமுனை கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மக்களுக்கு சொந்தமான வயல் காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடாது என குருந்தூர் மலையில் அமர்ந்துள்ள பௌத்த பிக்கு தடை விதித்துள்ளார்.

குருந்தூர் குளம் நீர்ப்பாசன எல்லைக்குள் அடங்கும் 07 குடும்பங்களுக்கு சொந்தமான 36 ஏக்கர் வயல்

15

## கொரோனா 19 பேர் பலி

(கொழும்பு)

கொரோனாத்தொற்றால் நாட்டில் மேலும் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில்,

15

## அன்பிற்குரியவர்களுக்கு நடந்தது தொடர்பில் அறியும் உரிமை உறவுகளுக்கு உண்டு

ஐ.நா பிரதிநிதி ஹனா சிங்கர்



(யாழ்ப்பாணம்)

தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்வதுடன் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யுமாறு வலியுறுத்துவதற்கான உரிமை காணாமல்போனோரின் குடும்பத்தினருக்கு இருக்கிறது என ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிர

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட

# அரசியல் தீர்வை தமிழ் மக்கள் பெற ஐ.நா உதவ வேண்டும்

## ஐ.நா பிரதிநிதியிடம் யாழ்.முதல்வர் கோரிக்கை



(யாழ்ப்பாணம்)

சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தீர்வைத் தமிழ் மக்கள் பெற ஐ.நா உதவ வேண்டும் என ஐ.நாவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதியிடம் யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள ஐ.நாவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் தலைமையிலான குழுவினருக்கும் யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் யாழ்.சுண்டுக்குளி பழைய பூங்கா வளாகத்தில் இடம் பெற்றது.

மேற்படி சந்திப்பில் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியுடன் அதிகாரிகளும் கலந்து கொண்டதுடன் யாழ்.மாநகர முதல்வர் மற்றும் யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன், யாழ்.மாநகர சபை உறுப்பினர் வரதராஜன் பார்த்தீபன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

குறித்த சந்திப்பில் தமிழ் இனத்தின் மீது காலாகாலமாக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புக்களுக்குச் சர்வதேச குற்றவியல் நீதி மன்றத்தின் மூலம் நியாயம் கிடைக்கப் பெற வேண்டும்.

சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் தீர்வைத் தமிழ் மக்கள் பெற ஐ.நா உதவ வேண்டும். திட்டமிட்டு அழிக்கப்படுகின்ற பொருளாதார கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்கும், மக்களுக்கான வாழ்வியலை மேம்படுத்தவும் உதவ வேண்டும் ஆகிய மூன்று கோரிக்கைகளை யாழ்.மாநகர முதல்வர் இலங்கைக்கான ஐ.நா வதிவிடப் பிரதிநிதியிடம் முன்வைத்தார். (ம-33)


## மணமகள் தேவை

15.05.1985 U.K.P.R உத்திரட்டாதி 1 ஆம் பாதம் - இராசி மீனம், சூரியன் - செவ்வாய் 4 இல், உயரம் - 5'10", கிரக பாவம் 18 1/2, B.com பட்டதாரி - யாழ். பல்கலைக்கழகம். இந்து கௌரவ குடும்பம், வயது எல்லை - 5 வயது வித்தியாசம், பட்டதாரி அல்லது A/L படித்த பெண் தேவை.

Mobile: 077 914 7318
Viber : 076 668 8199

(10002)



## யா/கெருடாவில் இ.த.க. பாடசாலை

100 Anniversary

### நூற்றாண்டு விழா தொடர்பான கலந்துரையாடல்

எமது பாடசாலை நடப்பாண்டில் நூறாவது ஆண்டில் தடம்பதித்துள்ளதையிட்டு உவகை கொள்கின்றோம்.

கெருடாவில் பிரதேசத்தில் நூற்றாண்டு பாரம்பரியம் கொண்ட இப்பாடசாலையின் நூற்றாண்டு விழா தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 13.02.2022 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாட்டின் சகல பாகங்களிலும் இருக்கின்ற இப்பாடசாலையின் பழைய மாணவர்கள், மாணவர்களின் பெற்றோர்கள், பாடசாலையின் மீது அக்கறை கொண்ட நலன்விரும்பிகள், கிராமத்தின் சிரேஷ்ட பிரஜைகள், இப்பாடசாலையின் முன்னைநாள் அதிபர்கள், ஆசிரியர்கள் போன்ற அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டு காத்திரமான கருத்துக்களை முன்வைக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:- பாடசாலை தொடர்பான வரலாற்றுக் குறிப்புக்கள், ஆவணங்கள், புகைப் படங்கள் மற்றும் வேறு தகவல்கள் வைத்திருப்பவர்கள் அவற்றை கொண்டு வருவது விரும்பத்தக்கது.

- அதிபர்

கெருடாவில், தொண்டைமானாறு (C-3697)



## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
திரு.இராசரட்ணம் வின்சன்
அவர்களின் அன்பு மாமி

திருமதி அழகேஸ்வரி செல்லத்துரை

அவர்களின் மரணச் செய்தி அறிந்து துயரடைகின்றோம். அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி

(10008)



## 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
22 . 07 . 1980

மறைவு
04 . 01 . 2022

Thinnai Organic, Chunnakam நிறுவனத்தில் பணிபுரிந்த

### அமரர் கணபதிப்பிள்ளை புஸ்பகாந்தன்

விழிகளை மூடி மௌனித்தாலும்
நினைவுகள் மட்டும் அழியாத சுடராய்
எல்லோர் மனதிலும் ஒளி வீசும்
உங்கள் ஆன்மா என்றும் உயிர்ப்புடன் வாழும்...

அவர்களின் மரணச் செய்தியறிந்து துயரடைகின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Progress Services (Pvt) Ltd (Security Service)
Palaly Road, Thirunelvely, Jaffna.

(C - 3699)



## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்
07 . 04 . 1984

மறைவு
17 . 01 . 2021

### டாக்டர் செல்வராஜ் இராஜகரன்

ஆண்டொன்று போனதையா
அழுது முடியவில்லை. மாண்டு நாம்
போகையிலும் மறக்காது உன் நினைவலைகள்
என்றும் அணையாத தீபமாக ஓங்கி நிற்கும்...

நாளை (04.02.2022) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி வீட்டுக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.
077 333 0053

தகவல் :
குடும்பத்தினர்

(C-3696)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘நியோகோவ்’ வைரஸ் நாட்டிற்குள் நுழையலாம்!

## சுகாதார பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)

**தென்னாப்பிரிக்காவின் புதிய கொவிட் மாறுபாடான நியோகோவ் அல்லது BA.2 வைரஸ், எதிர்வரும் நாட்களில் நாட்டிற்குள் நுழையும் அபாயம் இருப்பதாக சுகாதார அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.**



இது பரவும் பட்சத்தில் தொற்றுக்குள்ளாகாமல் பாதுகாத்துக் கொள்வதற்கு அனைவரும் தயாராக இருக்க வேண்டும் என பிரதி சுகாதார பணிப்பாளர் நாயகம் மருத்துவர் சுசி பெரேரா தெரிவித்தார்.

இந்த வகை வைரஸ் தற்போது தென்னாப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பரவி வருகிறது. இதனால் பாதிக்கப்படும் மக்கள் உயிரிழக்கும் அபாயம் உள்ளதாக சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாறுபாடில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கு கொவிட் பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றிருப்பது அவசியமாகும். இதனால் உடனடியாக சென்று பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு அவர் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (4)

# அரசின் செயற்பாட்டால் ஜி.எஸ்.பி.பிளஸ் சலுகை பறி போகும் அபாயம்

(கொழும்பு)

பயங்கரவாத தடைச் சட்டம் முழுமையாக திருத்தப்பட வேண்டும் என சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

அரசாங்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டு கடந்த 27 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தது.

ஆனால் இது போதுமானதல்ல என்றும் இது சர்வதேசத்தின் அழுத்தங்களை தணிப்பதற்கான அரசின் முயற்சி மட்டுமே என்றும் அந்த கண்காணிப்பகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் ஜீ.எஸ்.பி. பிளஸ் சலுகை அற்றுப் போகும் சூழ்நிலை ஏற்படும் என்றும் இதற்கு மத்தியில் அரசாங்கம் தற்போது சர்வதேச அழுத்தத்தின் தாக்கத்தை உணர ஆரம்பித்துள்ளதென்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இதனைக் கருத்திற்கொண்டு சர்வதேச சமூகம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் முழுமையான திருத்தத்துக்கு அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரியுள்ளது. (4)

# ரயில் துறையில் 7000 வெற்றிடங்கள்

(கொழும்பு)

ஓய்வு பெற்றவர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கு அனுமதி கிடைத்தால், மிகக் குறுகிய காலத்திற்குள் ரயில் சேவைகள் மீளமைக்கப்படும் என ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

ரயில்வே துறையில் தற்போது சுமார் 7,000 பணியிடங்கள் காலியாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் போக்குவரத்து அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று இடம் பெற்றதாகவும் தம்மிக்க ஜயசுந்தர மேலும் தெரிவித்தார். (4)


சிவமயம்



இணுவில் திருவருள்மிகு

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய

புனராவர்த்தன அஷ்டபந்தன நிகமோக்த நவகுண்டபக்ஷ மஹாயாக கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

திருமுழுக்குத் திருமுகம் – 06.02.2022

03.02.2022 வியாழக்கிழமை காலை 8 மணிக்கு ஸ்ரீ தருண கணபதி ஆராதனை, விசேஷ சந்தி, யாக பூஜை பகல் 12 மணிமுதல் வெள்ளிக்கிழமை இரவு 10 மணி வரை எண்ணெய்க்காப்பு, மாலை 4 மணி ஏகாட்சர கணபதி ஆராதனை, யாகபூஜை, ஹோமம், தீபராதனை

04.02.2022 வெள்ளிக்கிழமை காலை 8 மணி திரயட்சர கணபதி ஆராதனை, விசேஷசந்தி, யாகபூஜை, பாவனாபிஷேகம், ஸ்தாலீபாகம், ஹோமம், தீபராதனை
மாலை 4 மணிக்கு குமாரகணபதி ஆராதனை, பூத சுத்தி, யாகபூஜை, ஹோமம், தீபராதனை

எண்ணெய்க்காப்பு | 03.02.2022 வியாழன் பகல் 12.00 மணிமுதல் 04.02.2022 வெள்ளி இரவு 10.00 மணி வரை

06.02.2022 காலை 8 மணிக்கு மேல் 8.45 இற்குள் வரும் கும்பலக்கினத்தில் ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் தொடர்ந்து பிரதான கும்பங்கள் வீதி பிரதட்சிணம் 8.47 இற்கு மேல் 10.26 மணிக்குள் வரும் மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம்

(C-3694)

இங்ஙனம்
விநாயகர் அடியார்கள்.


# தடுப்பூசி திட்டத்தை வலுப்படுத்த தவறின் மீண்டும் முடக்கம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசியை வலுப்படுத்த அரசாங்கம் அதிக பட்ச முயற்சியை எடுக்காவிட்டால், நாட்டை மற்றொரு முடக்கத்தை நோக்கி நகர்த்துவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில் மற்றொரு கொரோனா அலையின் பரவலைத் தடுக்க சுகாதார வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிக்குமாறு பொதுமக்களை அச்சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இந்த விடயம் குறித்து ஊட கங்களுக்கு கருத்து தெரிவித்த சங்கத்தின் பொதுக்குழு உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே, கொரோனா வைரஸிக்கு எதிரான மூன்றாவது டோஸ் மருந்தைப் பெறுவதில் மக்கள் ஆர்வம் காட்டவில்லை என்றும் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றி மக்கள் பணிபுரியும் எந்த இடத்தையும் கண்டுபிடிக்க முடியாது என்றும் அவர் கூறினார்.

கொரோனா தடுப்பூசி அளவைப் பெறுவதில் ஆர்வத்தை மேம்படுத்துவதில் சுகாதார அமைச்சகம் மற்றும் அரசாங்கத்திடமிருந்து உந்துதல் இல்லாதது, கவலையளிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே, அதன் தீவிரத் தன்மை குறித்த விழிப்புணர்வு இல்லாததால், கடந்த சில வாரங்களாக கொரோனா வழக்குகளில் திடீர் அதிகரிப்பு மற்றும் இறப்புகளின் எண்ணிக்கை பதிவாகி வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

மற்றொரு கொரோனா தொற்று நோய் தோன்றினால், எதிர்காலத்தில் நேர்மறை வழக்குகள் அல்லது இறப்புகளின் எண்ணிக்கைக்கு அனைத்து அரசு, தனியார் மற்றும் ஊடகத் துறைகளும் பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (4)

# ஜனாதிபதி, பிரதமர் உட்பட 18 பேர் மீது சர்வதேச தடை

## சிங்கள ஊடகம் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும்பிரதமர் மகிந்த ராஜபக்ஷ உட்பட இலங்கை கடற்படை மற்றும் படை அதிகாரிகள் 18 பேர் மீது சர்வதேச தடைகளை விதிக்குமாறு பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு பிரித்தானிய அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

பிரித்தானிய பாராளுமன்றக் குழுவின் தலைவரான எலியட் கோல்பேர்ன் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார் என அச்செய்திக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, தற்போதைய இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா, சத்தியபிஞ்சர லியனகே, தற்போதைய பாதுகாப்பு செயலர் ஜெனரல் கமல் குணரத்ன, முன்னாள் யாழ். மாவட்ட தளபதி மகிந்த ஹத்துருசிங்க, முன்னாள் படைத்தளபதி மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய, பஞ்சரசன்ன சில்வா, நந்தன உடவத்த, சாகி கல்லகே, ஜி. டி. ரவிபிஞ்சரா, முன்னாள் கடற்படைத்தளபதி வசந்த கரன்னாகொட, அட்மிரல் திசார ரணசிங்க, சோமதிலக்க திஸாநாயக்க மற்றும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் முன்னாள் கட்டளைத் தளபதி ஆகியோரும் குறித்த தடை பட்டியலில் அடங்குகின்றனர்.

அத்துடன் விடுதலை புலிகளின் ஒன்பது புலம்பெயர் அமைப்புகளும் இந்த கோரிக்கைக்கு ஆதரவளித்துள்ளதாக அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

सत्यमेव जयते

# இந்திய துணைத் தூதரகம்
## யாழ்ப்பாணம்
## ஊடக அறிக்கை

## அறிவித்தல்

யாழ். இந்திய துணைத் தூதரகம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று (03.02.2022) வியாழக்கிழமை மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 8.30 மணி வரை நடைபெற ஏற்பாடு செய்திருந்த இந்திய கலைஞர்கள் வழங்க இருந்த ஒடிசி நடன நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் இடம்பெறாது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

யாழ்ப்பாணம்
02 பெப்ரவரி 2022

(C-3695)

### கூடைப்பந்தாட்டப் போட்டி
# பல்கலைக்கழக தேசிய பெண்கள் அணி சம்பியன்



பரபரப்பான இறுதியாட்டத்தில் இலங்கை பல்கலைக்கழக தேசிய பெண்கள் கூடைப்பந்தாட்ட அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கூடைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.

இதன் இறுதியாட்டத்தில் இலங்கை பல்கலைக்கழக தேசிய கூடைப்பந்தாட்ட அணியை எதிர்த்து கம்பஹா அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பம் முதல் இறுதி வரை இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஆட்ட நேர முடிவில் இலங்கை பல்கலைக்கழக தேசிய பெண்கள் கூடைப்பந்தாட்ட அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி 57:51 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். (4-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2501

Search for people, places and things

**றஜிந்தன்**

ஒயின் சாப்புக்கு போன ஆணும்
பிறந்த வீட்டுக்கு போன பெண்ணும்



புலம்பாம திரும்பி வந்ததா சரித்திரம் இல்லை

**சானுகா**

ஆசிரியர்: கல்யாணத்தப்போ பொண்ணு மாப்பிள்ளை கைகளை ஏன் சேர்த்து வைக்கிறாங்கன்னு தெரியுமா முருகேசா?



அது பாக்ஸிங் பார்முலா சார். அதுல மொதல்ல கை கொடுக்கச் சொல்வாங்க

**ஜறின்**

Childhood pics of




**சங்கவி**

இப்படி ஒரு மாப்பிள்ளை எங்க தேடினாலும் உங்க பொண்ணுக்கு கிடைக்காது அப்படியா?




ஆமா நாலஞ்சு வருஷமா பொலிஸ்காராங்க தேடியே கிடைக்கலனா பாத்துக்குங்க

**தினோயன்**

பஸ்ல கண்டக்டர் மீதி சில்லறைய அப்புறம் தர்றேனு சொன்ன உடனேயே



நமக்குள் ஒரு வடிவேலு புகுந்து விடுகிறார்

**கம்சிகா**

நாம கழட்டி விட்டாலும் நமக்காக காத்திருப்பது



நம்ம செருப்பு தான். ஆனா அதையும் சில பேர் களவாண்டுட்டு போயிடுறாங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபைக்கு ஒரு வாரத்திற்கு எரிபொருள்

## கம்மன்பில உறுதி



(கொழும்பு)

மின்சார சபையின் மின் உற்பத்தி நிலையங்களின் செயற்பாட்டிற்கு தேவையான எரிபொருள் ஒரு வாரத்திற்கு வழங்கப்படும் என எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிற்கு அறிவித்துள்ளார்.

மின்சார சபைக்கு தேவையான எரிபொருள் இன்று முதல் (நேற்று) வழங்கப்படும் என்றும் இதனால் மின் உற்பத்தி நிலையங்களின் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படாது என்றும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

எனினும் நுரைச்சோலை, சப்புகஸ்கந்த, களனிதிஸ்ஸ மற்றும் கொழும்பில் உள்ள மின் உற்பத்தி நிலையமொன்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இதன் காரணமாக நேற்று முன்தினம் நாடளாவிய ரீதியில் பல பகுதிகளில் முன்னறிவிப்பு இல்லாமல் மின்சாரம் துண்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4)

# அதிபரைத் தாக்கிய ஆசிரியை

## களேபரமாகிய பாடசாலை வளாகம்

(திருமலை)

ஆசிரியரால் தாக்கப்பட்டு மயக்கமுற்ற நிலையில் திருகோணமலை சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரி அதிபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலையில் இடம்பெற்றுள்ளது.

இதனால் மாணவர்கள் - ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து வீதியினை மறித்து எதிர்ப்பு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் தெரியவருகையில்,

திருகோணமலையிலுள்ள பிரபல பெண்கள் பாடசாலையான சிறி சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் சில வருடங்களுக்கு முன் ஹபாயா விவகாரம் தொடர்பில் பிரச்சினை எழுந்த நிலையில் நேற்று மீண்டும் அவ்விவகாரம் மாணவர்கள் - ஆசிரியர்கள் - பெற்றோர் மத்தியில் பூதாகரமாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஓர் ஆசிரியை முகத்தை முழுவதுமாக மறைத்து "ஹபாயா" அணிந்து பாடசாலைக்கு வந்த நிலையில் மாணவர்களும் பெற்றோரும் இதை எதிர்த்து வெளிநடப்பு செய்துள்ளனர்.

இதை குறித்த ஆசிரியை காணொளிப் பதிவு செய்துள்ளதாகவும் அதைத் தடுக்க அதிபர் தலையீடு செய்ததையடுத்து அதிபரை குறித்த ஆசிரியை தள்ளி விட்டதாகவும் இதையடுத்து கீழே விழுந்து மயக்கமடைந்த அதிபர் திருகோணமலை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# விடுதி சுற்றிவளைப்பு; பலர் கைது

(கொழும்பு)

கொள்ளுப்பிட்டியில் அனுமதிப்பத்திரமின்றி நடத்தப்பட்டு வந்த இரவு நேர களியாட்ட விடுதியொன்று சுற்றிவளைக்கப்பட்டதில் 12 வெளிநாட்டவர்கள் உட்பட 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த களியாட்ட விடுதிக்குள் காணப்பட்ட அனுமதிப்பத்திரம் அற்ற 483 பியர் போத்தல்கள், 6 வைன் போத்தல்கள், உள்நாட்டு மதுபான போத்தல்கள் மற்றும் சட்டவிரோதமாக நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட 100 சிகரெட்டுக்கள் என்பனவும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. (4)

சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 07.01.2022 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர். நாகராசா சின்னமணி (காந்தி)**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 04.02.2022 நாளை வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் (06.02.2022) ஞாயிற்றுக் கிழமை பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(9920)

இல. 65, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 275 2534, 076 843 8257

# இராசிபலன்

03.02.2022
தை 21, வியாழக்கிழமை
துதியை முற்பகல் 9.14 மணிவரை

சதயம் முன்னிரவு 7.47 மணிவரை
சுபநேரம் - 8.05-9.35 மணிவரை
இராகுகாலம் -2.05-3.35 மணிவரை

சந்திராஷ்டமம்-
புனர்பூசம், பூசம்

வளவன்

**மேஷம்** நீங்கள் எதிர்பாராத பிரமுகர் ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொள்ளலாம், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையக்கூடும், முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பிள்ளைகளால் பெருமை வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**மகரம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கல்யாணக் கனவுகள் நனவாகலாம், காணாமல் போன பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்பு உண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**சிம்மம்** புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், சென்ற இடங்களில் செல்வாக்கு அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு, உடல் நலம் சீராக உற்சாகத்துடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் நம்பிக்கை பெறுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**கும்பம்** உடல் நலனில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள், புதிய பொறுப்புக்களினால் வேலைச் சுமை அதிகரிக்கும், மறக்க முடியாத சம்பவமொன்று இடம்பெறலாம்.

**மிதுனம்** எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, கோரிக்கைகள் நிறைவேற கோயிலுக்குச் செல்ல வேண்டிய நாள், ரோக பயமுண்டு, பகையொன்று நட்பாகலாம்.

**கன்னி** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், நிலையான வருமானத்திற்கு வழி கிடைக்கும், கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆரோக்கியமான நாள்.

**தனுசு** குடும்பத்தில் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**மீனம்** உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, பயணங்களால் தேக நலன்கள் பாதிக்கப்படலாம், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.

எல்லோரும் பார்த்து இரசிக்கும் மலர்போல வாழக் கற்றுக்கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் விவசாய நிலங்களை
# முழுமையாக பயன்படுத்த வேண்டும்
## யாழ்.அரச அதிபர்

(குப்பிழான்)

யாழ்.மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் நேற்று முன்தினம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் அரசாங்க அதிபர் க.மகேசன் கருத்துத் தெரிவிக்கையில், மக்கள் விவசாய நிலங்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். விவசாய நிலங்களில் கட்டடங்கள் அமைப்பதற்கான அனுமதி கோரும் பட்சத்தில் அதற்கான அனுமதியை வழங்கும் திணைக்களங்கள் உரிய வகையில் ஆராய்ந்து தோட்டக் காணிகளினைப் பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்கித் தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். அதிக விலைக்கு கிருமிநாசினிகள், உரங்களினை விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

பசுமை விவசாயம் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அவர்களுடன் விவசாய அமைப்புக்கள் சேர்ந்து பசுமை விவசாயத்தினை பலப்படுத்த வேண்டும். அடுத்த போகத்தினைச் செயற்படுத்த முன்கூட்டியே பிரதேச மட்ட விவசாய அமைப்புக்களினை ஒன்று கூட்டிச் செயற்பாடுகளை முன்னெடுக்குமாறும் ஆலோசனை வழங்கினார்.

விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டங்கள் முறையாகச் செயற்படுத்தப்படுவதுடன் வங்கிகள் விவசாயிகளிற்கு கடன் வழங்கும் போது அதுபற்றிய பொதுவான விழிப்புணர்வுகளை அவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். (5-6-18)

# வீடு புகுந்து தாக்குதல் மூவர் கைது



(குப்பிழான்)

மோட்டார் சைக்கிளில் சென்ற குழுவொன்று கோண்டாவில் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிற்குள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அத்துமீறி நுழைந்து தாக்குதலை நடத்தியது.

குறித்த தாக்குதல் சம்பவத்தில் வீட்டிலிருந்த பெறுமதியான பல பொருட்கள் சேதமாக்கப்பட்டன. இந்த தாக்குதல் சம்பவம் தொடர்பில் கோப்பாய்ப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இந்நிலையில் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி காணொளியை அடிப்படையாக வைத்துப் பொலிஸார் மூன்று சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேகநபர்கள் யாழ்.வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேற்படி தாக்குதல் சம்பவம் தாதல் விவகாரம் காரணமாக இடம்பெற்றுள்ள தாகப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகள்மூலம்தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிகவிசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.(5-4-18-33)

# ஊடகவியலாளர் மீது தாக்குதல் சந்தேக நபர் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரியில் ஊடகவியலாளர் ஒருவரை தாக்கி காயப்படுத்தி, உயிர் அச்சுறுத்தல் விடுத்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று புதன்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார்.

கடந்த திங்கட்கிழமை மதியம் கடமை முடித்து சாவகச்சேரி கச்சாய் வீதியால் வீடு திரும்பிய ஊடகவியலாளரை வானில் வந்தவர்கள் மோத முற்பட்டதுடன், அவரை தாக்கி காயப்படுத்தினர். இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஊடகவியலாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் பொலிஸார் சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளனர். (5-6-30)

# மதுபோதையில் மன்று சென்றவருக்கு சிறை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்திற்குள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மதுபோதையில் நுழைந்து ரகளை புரிந்தவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனையும், 3500 ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுளளது.

குறித்த நபர் வழக்கு ஒன்று சம்பந்தமாக வருகை தந்திருப்பதாகக் கூறி நீதி மன்ற வளாகத்திற்குள் நுழைந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (5-6-30)



இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து வடமராட்சி பருத்தித்துறை சுப்பர்மடம் மீனவர்கள் வீதியை இடைமறித்துத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மீனவர்களின் போராட்டக் களத்திற்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சென்ற யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் கலந்துரையாடியதுடன் தனது பூரண ஆதரவையும் தெரிவித்தார்.

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வரணி.கரம்பைக் குறிச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் மீள் உருவாக்கம் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

எனவே அனைத்து பழைய மாணவர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அதிபர் என்.கண்ணதாசன் அறிவித்துள்ளார். (5-6)

# கஞ்சாவுடன் இருவர் கைது



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புன்னாலைக் கட்டுவன் - காளியாவத்தை பகுதியில் 200 கிராம் கஞ்சாவுடன் நேற்று இருவர் கைது செய்யப்பட்டனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், இராணுவ புல்னாய்வு பிரிவினரும். தெல்லிப்பழை பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது சந்தேக நபர்கள் இருவரும் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸார் கைது செய்யப்பட்ட இருவரையும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5-6-104)

# சதுர்த்தி விரதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் சதுர்த்தி உற்சவத்தை முன்னிட்டு நாளை 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜை என்பன நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் திரு வீதி வலம் வருதலும் இடம் பெறும். (5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 370 | 330 | 350 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 170 |
| பச்சைமிளகாய் | 450 | 450 | 500 |
| தக்காளி | 140 | 140 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 60 |
| கோவா | 240 | 230 | 250 |
| கரட் | 420 | 450 | 500 |
| பூசணி | 140 | 130 | 220 |
| புடோல் | 250 | 200 | 280 |
| வாழைக்காய் | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 150 | 150-180 | 200 |
| பாகற்காய் | 300 | 350 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 150 | 100 | 140 |
| பயற்றங்காய் | 450 | 450 | 360 |
| லீக்ஸ் | 220 | 230 | 280 |
| பீற்றூட் | 300 | 280 | 350 |
| கறிமிளகாய் | 550 | 600 | 500 |
| முருங்கைக்காய் | 1200 | 800 | -- |
| போஞ்சி | 200 | 260 | 350 |
| கத்தரிதம்புள்ள | 300 | -- | 300 |
| கீரை - 1 பிடி | 60 | 80 | 80 |
| தேசிக்காய் | 150 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50-90 | 60-90 |
| இராசவள்ளி | 260 | 200 | 240 |
| வெங்காயப்பூ | 180 | 200 | 300 |
| முள்ளங்கி | 80 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 110 | 80 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் கனிந்த

## சேவை நலன் பாராட்டுக்கள்




### வயிரவன் செல்வம் (B.A Hons)

**ஓய்வுபெற்ற அத்தியட்சகர்**
**அரச முதியோர் இல்லம் கைதடி**

புன்சிரிப்பும் இளகிய மனதும்
உமது வாழ்நாள் சேவையில்
என்றும் குறைவில்லா இரு
அழகிய பண்புகள்- சேவைக்கு
மெருகூட்டின. ஏழைகளின்
தோழனாய் மக்களின்
அன்புக்குரியவனாய் சக
உத்தியோகத்தர்களின்
தோழனாய்
ஆற்றிய சேவைகள் பல
விழாக்கள், கலை நிகழ்வுகள்,
சுற்றுலாக்கள், போட்டிகள்
என நிகழ்வுகளில் முதியோருக்கு
நீங்கள் முன்னின்று
செய்த அறப்பணிகள்
எல்லோருக்கும்
உதாரண புருசராய் மனதில்
என்றும் நிலைத்திருக்கும்
ஓய்வுக்காலம் சமூகப் பணி
சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சேவைக் கால விபரம்**

மாவட்டச் செயலகம் -அம்பாறை - 01.11.1989- 04.04.1990- (சமூக சேவை உத்தியோகத்தர்)
மாவட்டச் செயலகம் - முல்லைத்தீவு - 05.04.1990- 30.06.1993- (சமூக சேவை உத்தியோகத்தர்)
பிரதேச செயலகம் -உடுவில் -01.07.1993- 28.02.2002- (சமூக சேவை உத்தியோகத்தர்)
பிரதேச செயலகம் கோப்பாய் -01.03.2002-10.01.2005 -(சமூக சேவை உத்தயோகத்தர்)
பிரதேச செயலகம் -வேலணை- 31.01.2005- 07.04.2008- (சமூக சேவை உத்தியோகத்தர்)
பிரதேச செயலகம்- சங்கானை - 08.04.2008- 05.02.2013- (சமூக சேவை உத்தயோகத்தர்)
பிரதேச செயலகம் -காரைநகர் 06.02.2013- 14.09.2014- (சமூக சேவை உத்தியோகத்தர்)
யாழ்.மாவட்ட சமூக சேவை அலுவலகம் 15.09.2014- 02.03.2019 (மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்)
அரச முதியோர் இல்லம் - கைதடி 13.03.2019- 04. 07.2021- (முதியோர் இல்ல அத்தியட்சகர்)

(9997)

**வாழ்த்துவோர்-வட மாகாண சமூக சேவை உத்தியோகத்தர் சங்கம்.**

# உளம் கனிந்த

## சேவை நலன் பாராட்டுக்கள்




### வேதநாயகம் தபேந்திரன்

(B.com,Dip in pub Admin.,M.A (Development)
**(ஓய்வு நிலை மாவட்ட சமூக சேவை அலுவலர் கிளிநொச்சி மாவட்டம்)**

சமூக சேவை அலுவலர்களின்
முன்னுதாரணமாய் திகழ்ந்தீா்
திருமலையில் பணி தொடங்கி
யாழ்ப்பாண மண்ணில்
பாங்குடனே பணி செய்தீர்
சமூக சேவை உத்தியோகத்தர்
சங்கத்திற்கு உறுதுணையாய்
பல ஆண்டுகள் பல உழைப்புக்கள்
தந்தீர் ஆனாலும் தொழிலுக்கு
நிறைவு காண முன்னே ஓய்வெடுத்தீர்
புத்தக வெளியீடுகள்
வரலாற்றுப் பதிவுகள் தந்தீர்
சுங்கப் பணி, சமூகப் பணி, ஊடகப்
பணி திறம்பட செய்தீர்
தொடரட்டும் உங்கள் சமூகப்
பணி. அரசியல் பணி
ஓய்வுக்காலம் சிறக்க
உளமார்ந்த வாழ்த்துக்கள்

**சேவைக்கால விபரம்**

சமூக சேவைகள் திணைக்களம் வட கிழக்கு மாகாணம் - 03.02.1997- 05.02.1997
பிரதேச செயலகம்- ஈச்சிலம்பற்று - 06.02.1997- 05.04.1998- (சமூக சேவை உத்தியோகத்தர்)
பிரதேச செயலகம் - கிண்ணியா - 06.04.1998- 15.07.2001- (சமூக சேவை உத்தியோகத்தர்)
பிரதேச செயலகம் - தம்பலகாமம் பிரதேச செயலகம் - 16.07.2001-14.01.2003 (சமூக சேவை உத்தியோகத்தர்)
பிரதேச செயலகம்- வேலணை 16.01.2003-03.01.2005 (சமூக சேவை உத்தியோகத்தர்)
பிரதேச செயலகம்-கோப்பாய் 04.01.2005-17.01.2012-(சமூக சேவை உத்தியோகத்தர்)
பிரதேச செயலகம்- கரைச்சி 18.01.2002-03.08.2016- சமூக சேவை உத்தியோகத்தர்)
மாவட்ட சமூக சேவை அலுவலர் கிளிநொச்சி - 24.01.2012- 01.03.2020

(9997)

**வாழ்த்துவோர்-வட மாகாண சமூக சேவை உத்தியோகத்தர் சங்கம்.**

# சேவைநலன் பாராட்டி வாழ்த்து




திருமதி.

### பிறேமநிதி விமலேந்திரன்

(B.A Hons)
**சமூக சேவை உத்தியோகத்தர் - நெடுங்கேணி**

ஓய்வின்றி 32 ஆண்டுகள் பணி செய்தீர்,
யுத்தத்தின் வடுக்களை உடலிலும் மனதிலும் சுமந்து
ஆற்றிய சேவைகள் மகத்தானவை,
சுனாமியும் யுத்தமும் உங்கள் சேவைக்கு
இரு அளவு கோல்களைத் தந்து சென்றன.
அயராத சேவையினால் முல்லை மக்களின் மனதில்
இடம் கொண்டீர்- நிறைவான அன்புடனே,
உழைப்பின் தியாகத்தை அளவிட அளவு கோல்கள் இல்லை
தொடரட்டும் சமூகப் பணி, நிறையட்டும் ஓய்வுக்காலம்,

**சேவைக்கால விபரம்**

மாவட்டச் செயலகம் - முல்லைத்தீவு 01.11.1989 - 31.07.1993
பிரதேச செயலகம்- சங்கானை 01.08.1993- 25.08.1996
பிரதேச செயலகம்- புதுக்குடியிருப்பு 27.08.1996- 07.04.2002
பிரதேச செயலகம் - கரைதுறைப்பற்று 08.04.2002- 05.02.2013
பிரதேச செயலகம்- வவுனியா 06.02.2013- 06.09.2016
பிரதேச செயலகம்- வவுனியா வடக்கு 07.09.2016 -31.03.2021

(9997)

**வாழ்த்துவோர்: வட மாகாண சமூக சேவை உத்தியோகத்தர் சங்கம்.**


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா:30 செவ் 7 சூரி 11 ல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்: கணக்காளர் நிதி வங்கிஅதிகாரி cima, Bsc
எதிர்பார்ப்பு:பட்டதாரி வங்கிவேலை விரும்பத்தக்கது
தொ.இ: B/12238

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா:30 செவ் 4 சூரி 3ல்
உயரம்:5'6"
தகைமை/தொழில்:A/Lவிளையாட்டு பயிற்றுவிப்பாளர் PT Master
எதிர்பார்ப்பு:சாதாரணபடித்த பெண் உத்தியோகம் விரும்பத்தக்கது
தொ.இ: B/12239

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்:பரணி 2
கி.பா:31 செவ் 9 சூரி 7 ல்
தகைமை/தொழில்:Bscபட்டதாரி சுங்கத் திணைக்களம்
எதிர்பார்ப்பு:பட்டதாரி
தொ.இ: B/12240

பிறப்பு:1991 இந்து
நட்சத்திரம்:ரேவதி 4
கி.பா: 11 செவ் 12 சூரி 11 ல்
உயரம்:172 cm
தகைமை/தொழில்:QS
எதிர்பார்ப்பு: தகுந்த படித்த பெண்
தொ.இ: B/12241

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 கிறிஸ்தவம் RC
நட்சத்திரம்:ரேவதி 3
கி.பா: சூரி , செவ் 1
உயரம்:5'2"
தகைமை/தொழில்: கற்பித்தலில் டிப்ளோமா ஆசிரியை
எதிர்பார்ப்பு:பட்டதாரி யாழ்ப்பாணம் (அரச, தனியார் உத்தியோகம்)
தொ.இ: G/12327

பிறப்பு: 1997 இந்து
நட்சத்திரம்: சுவாதி 1
கி.பா:செவ் 1 சூரி 12 ல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு:வெளி நாடு மட்டும்
தொ.இ:G/12340

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: அவிட்டம் 2
கி.பா:63 செவ் 6 சூரி 11ல்
உயரம்:154 cm
தகைமை/தொழில்:B.F.Aபட்டதாரி
எதிர்பார்ப்பு:தகுந்த உள்நாடு ,வெளிநாடு
தொ.இ:G/12342

பிறப்பு: 1978இந்து
நட்சத்திரம்:பூராடம் 2
கி.பா:48 செவ் 9சூரி 7ல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்: BAஆசிரியர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி அரச தனியார் உத்தியோகம்
தொ.இ:G/12344

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈக்வடோர் நிலச்சரிவில் சிக்கி 24 பேர் பலி

## மீட்புப் பணி தீவிரம்



(குயிட்டோவ்)

ஈக்வடோர் தலைநகர் குயிட்டோவில் தொடர்ந்து பெய்த கனமழையால் பல பகுதி களில் வெள்ளம் சூழ்ந்தது. இதனால், குடியிருப்புகள், விளையாட்டு மைதானங்கள் என பல இடங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

இந்நிலையில், தொடர் மழையால் வெள்ளப்பெருக்கும், பல இடங்களில் நிலச் சரிவும் ஏற்பட்டுள்ளன.

இதில் சிக்கி சுமார் 24 பேர் உயிரிழந்துள்ளதாக குயிட்டோவின் பாதுகாப்புப் படையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும், 8 வீடுகள், கார் உள்ளிட்ட வாகனங்கள் வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டுள்ளன.

இந்த பேரழிவில் சிக்கிய சுமார் 48 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதாகவும், 12 பேரை மீட்கும் பணி யில் ஈடுபட்டுள்ளதாகவும் பாதுகாப்பு படையினர் கூறியுள்ளனர்.

மேலும், அடுத்த சில நாட்களுக்கு மழை நீடிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளதால், பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளனர். (4)

# சீனாவில் களைகட்டும் 'புலி வருடம்'





(பீஜிங்)

சீனாவில் நேற்று முன்தினம் 1 ஆம் திகதி புத்தாண்டு மலர்ந்துள்ள நிலையில் அங்கு புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் களைகட்டி வருகின்றன.

சீனாவில் 12 மிருகங்களின் பெயரில் வருட பிறப்பை கொண்டாடி வருகின்றனர். 12 ஆண்டுகள் முழுந்தவுடன் மீண்டும் அதே சுழற்சி ஆரம்பமாகும். அதன்படி எருது வருடம் முடிவடைந்து, நேற்று முன்தினம் புலி வருடம் ஆரம்பித்தது.

அந்நாட்டுக் கலாசாரத்தின் படி, புலி, வலிமை மற்றும் தைரியம் இரண்டையும் குறிக்கிறது. அதன்படி இந்த புதிய வருடம் துயரத்திலிருந்து மக்களை மீட்டு அமைதியைக் கொடுக்கும் என்று நம்பப்படுகிறது. (4)

# கனடாவில் போராட்டம் பிரதமர் கண்டனம்



(ஒட்டாவா)

கனடா அரசின் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிராக அந்நாட்டில் போராட்டம் உருவெடுத்தது. இதனால் தலைநகரில் நிலைமை மோசமானதை தொடர்ந்து பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, குடும்பத்துடன் இரகசிய இடத்துக்கு மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் அரசின் கொரோனா கட்டுப்பாடுகளுக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து வலுத்து வருகிறது.

ஆயிரக்கணக்கான போராட்டக்காரர்கள் பாராளுமன்றம் முன்பு திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் மக்களின் இந்த போராட்டம் "உண்மைக்கு ஒரு அவமானம்" என கூறி பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். (4)

# வடகொரியாவிற்கு ஐ.நா. எச்சரிக்கை

(ஜெனிவா)

வடகொரியா மிக நீண்ட தூர ஏவுகணையை கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏவி சோதனை மேற்கொண்டதை ஐ.நா. பொதுச் செயலாளர் கண்டித்துள்ளார்.

இதனிடையே, வட கொரியா மேலும் எதிர்விளைவு நடவடிக்கைகளை எடுப்பதை நிறுத்த வேண்டும் என்று துணை ஐ.நா. செய்தித் தொடர்பாளர் அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

வட கொரியா மிக நீண்ட தூர ஏவுகணை சோதனை மேற்கொண்டது, 2018 இல் அந்நாட்டின் மீது விதிக்கப்பட்ட தடையை மீறுவதாகும் மற்றும் பாதுகாப்பு கவுன்சில் தீர்மானங்களை மீறும் செயலாகும்.

சர்வதேச விமானம் அல்லது கடல்சார் பாதுகாப்பு தொடர்பான எந்தவொரு பரிசீலனையும் வட கொரியா மீண்டும் புறக்கணித்திருப்பது மிகுந்த கவலை அளிக்கிறது என துணை ஐ.நா. செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (4)

# இடமிருந்து வலமாக திருக்குறள் எழுதி சாதனை



(டில்லி)

திருக்குறள் குறித்து இன்றைய இளையதலைமுறையிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருவண்ணாமலையைச் சேர்ந்த யோகா ஆசிரியை கல்பனா 1,330 திருக்குறளையும் இடமிருந்து வலமாக 4.15 மணி நேரத்தில் எழுதி சாதனை படைத்தார்.

உலக பொதுமறை என்று போற்றப்படுவது திருக்குறள். இதனை இயற்றிய திருவள்ளுவர் நாட்டுக்கும், மக்களுக்கும் தேவையான அறிவு பூர்வமான கருத்துக்களை எளிய முறையில் தெரிவித்துள்ளார்.

அதனை உலகம் முழுவதும் உள்ள அறிஞர்கள் போற்றி பாதுகாத்து வருகின்றனர்.

இந்த நிலையில் திருக்குறள் குறித்து இன்றைய இளையதலைமுறையிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் திருவண்ணாமலையைச் சேர்ந்த யோகா ஆசிரியை கல்பனா 1,330 திருக்குறளையும் இடமிருந்து வலமாக 4.15 மணி நேரத்தில் எழுதி சாதனை படைத்தார். (4)

# இராணுவ ஆட்சியின் ஓராண்டு நிறைவு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது

(மியன்மார்)

மியன்மாரில் கடந்த ஆண்டு பெப்ரவரி 1 ஆம் திகதி இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியது. அந்த நாட்டின் பாராளுமன்றம் கூடவிருந்த நிலையில், ஆங்சான் சூகி உள்ளிட்ட தலைவர்கள் கைது செய்யப்பட்டு வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டனர்.

இதையடுத்து, மியன்மார் மக்கள் வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தினர். ஆனால், அங்கு இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டதை அந்த நாட்டின் இராணுவ தளபதி மின் ஆங்ஹலேங் நியாயப்படுத்தினார்.

இதை வல்லரசு நாடான அமெரிக்கா கடுமையாக கண்டித்தது. அங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாய கத்திற்கான தேசிய லீக் கட்சி அரசு அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தியது.

அதிகாரத்தைத் தக்க வைக்க இராணுவம் கடும் அடக்கு முறையை பயன்படுத்தியது. அதன் ஜனநாயக ஆதரவாளர்களுடன் மோதலை அதிகப்படுத்தியுள்ளது.

பாதுகாப்புப் படையினரால் சுமார் 1,500 பேர் கொல்லப்பட்டதாகவும் 8,800 பேர் சித்திரவதை செய்யப்பட்டு காணாமல் போயுள்ளனர்.

எதிர்ப்பை கட்டுப்படுத்த இராணுவம் கிராமங்களை இடித்துத் தள்ளியதால் 3,00,000 இற்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில், இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று முன்தினம் போராட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அவர்கள் இராணுவத்துக்கு எதிராக கோஷமிட்டனர். [illegible] செய்தனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வு வாகனங்களுடன் சாரதிகள் கைது



(தருமபுரம்)

அண்மைக்காலமாக சட்டவிரோத செயல்கள் அதிகரித்துள்ள நிலையில் அதனை கட்டுப்படுத்தும் நோக்கில் தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தலைமையில் சட்டவிரோத செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் ஓர் சிறப்பு பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. அதற்கமைய நேற்று மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் முரசுமோட்டை ஊழியான் பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வில் ஈடுபட்ட 3 டிப்பர் வாகனங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சாரதிகளும் தருமபுர பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

மேலும் பிரமந்தனாறு மயில் வாகனபுரம் பகுதியில் அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் ஆற்றுப் பகுதியில் மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரண்டு உழவு இயந்திரங்களுடன் சாரதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

உரிய அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியமை மற்றும் சாரதி அனுமதிப் பத்திரம் இன்மை, சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை போன்ற குற்றங்கள் தொடர்பில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். அத்துடன் இன்று நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிடி எம்சதுரங்க தெரிவித்தார். (5-6-100-316)

# மன்னாரில் அதிகரிக்கும் கொரோனா 2 நாட்களில் 99 தொற்றாளர்கள்

(மன்னார்)

**மன்னார் மாவட்டத்தில் கடந்த இரு தினங்களில் 99 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.**

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை 60 கொரோனா தொற் றாளர்களும்,நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை 39 கொரோனா தொற்றாளர்கள் உள்ளடங்கலாக கடந்த 2 தினங்களில் 99 கொரோனா தொற்றாளர்கள் அன்டிஜென் பரிசோதனை மூலம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த சடுதியான எண்ணிக்கை அதிகரிப்பு மன்னார் மாவட்டத்தில் ஒமிக்ரோன் தொற்று பரவல் ஏற்பட்டிருக்கக் கூடும் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி இருப்பதினால் பொதுமக்கள் விழிப்புடனும், அவதானத்துடனும் இருக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மக்கள் சுகாதார வழிமுறைகளை கடை பிடிப்பதோடு, மூன்றாவது அல்லது பூஸ்டர் தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக குறித்த தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பாடசாலைகளில் மாணவர்களுக்கு முதலாவது தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு நிறைவடைந்துள்ளது. மொத்தமாக 12,500 மாணவர்கள் குறித்த தடுப்பூசியை பெற்றுக் கொண்டுள்ளனர்.மன்னார் மாவட்டத்தில் சராசரியாக இதுவரை 34 சதவீதமான 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர்.



அதேவேளை மார்ச் மாதம் முதலாம் ஆம் திகதி இடம் பெற உள்ள மகாசிவராத்திரி விழாவிற்காக மன்னார் திருக்கேதீஸ்வரத்திற்கு வருகை தர இருக்கும் பக்தர்கள் கட்டாயம் பூஸ்டர் தடுப்பூசியை பெற்று 2 வாரங்களாவது நிறைவடைந்து இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-6-285)

# மந்தகதியில் வீதிபுனரமைப்பு மாற்றுவழியின்றி மக்கள் அவதி

(குருமன்காடு)

வவுனியா, மணிபுரம் கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட அன்னை திரேசா வீதியின் அபிவிருத்தி பணிகள் கடந்த ஒரு வாரகாலமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமையால் மாற்று வழியின்றி மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

வவுனியா தெற்கு பிரதேச சபையின் கீழ் குறித்த வீதி கல்லிட்டு தாரிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனினும் அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கு மாற்றுப்பாதை எவையும் ஏற்படுத்தி கொடுக்காது, வீதி புனரமைப்புப் பணிகள் முன்னெடுத்து செல்லப்படுவதனால் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ள னர்.

வீதியின் ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு கற்கள் பரவப்பட்டுள்ளதுடன், குறித்த கற்கள் வீதியின் கரையிலும் சிதறி காணப்படுவதனால் அப்பாதையூடாக மக்கள் நடந்து செல்வது கூட முடியாதுள்ளது.

தமது வாகனங்களைக் கூட குறித்த வீதியூடாக எடுத்துச் செல்ல முடியாமையினால் வேறு இடங்களில் வாகனங்களை நிறுத்தி வைக்க வேண்டிய நிலை அப்பகுதி மக்களுக்கு உருவாகியுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்தி மக்கள் வீதியின் ஓரமாக நடைபாதையில் நடந்து செல்வதற்காவது நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (5-6-250)

# சிறுமியின் மரணம் தொடர்பான சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல் நீடிப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மூங்கிலாறு கிராமத்தை சேர்ந்த 13 வயது சிறுமி மரணம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது

ஏற்கனவே இவர்களுக்கு நேற்று முன்தினம் வரை விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று குறித்த வழக்கு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது குறித்த ஐந்து பேரினதும் விளக்கமறியல் எதிர்வரும்15 ஆம் திகதி வரை நீடித்து அன்றைய தினத்துக்கு வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.

கடந்த 13.12.2021 ஆம் திகதி முதல் காணாமற் போயிருந்த சிறுமி, கொலை செய்யப்பட்ட நிலையில் 18.12.2021 ஆம் திகதி சடலமாக அவரது வீட்டிலிருந்து சுமார் 400 மீற்றர் தொலைவில் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்கள் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படாத நிலையில் காணொளி ஊடாக இந்த வழக்கினை விசாரித்த நீதவான் வழக்கு விசாரணை நிறைவடையாத நிலையில் அவர்களை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (5-6-281)

# போக்குவரத்து வசதியின்றி அல்லலுறும் மக்கள்

(அக்கராயன்)

கரைதுறைப்பற்று ஆறுமுகத்தான்குளம் கிராமத்திற்கு பேருந்து சேவையினை நடத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அயல் கிராமமான குமுழமுனை கிராமத்திற்கு பேருந்து சேவைகள் இடம்பெறும் நிலையில் 110 குடும்பங்கள் வாழ்கின்ற ஆறுமுகத்தான்குளம் கிராமத்திற்கு பேருந்து சேவைகள் வருவதில்லை எனவும் இதன் காரணமாக போக்குவரத்து நெருக்கடியை இக்கிராம மக்கள் எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக முல்லைத்தீவு நகரத்திற்குச் செல்வதற்கு 05 கிலோமீற்றர் தூரம் நடந்து சென்றே பேருந்து சேவையைப் பெற வேண்டி உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

போக்குவரத்து நெருக்கடி தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் ஆகியோரிடமும் இக்கிராம மக்களினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. போக்குவரத்து நெருக்கடி காரணமாக குமுழமுனை மகா வித்தியாலயம், முல்லைத்தீவு நகர பாடசாலைகளுக்கும் இக் கிராமத்தில் இருந்து மாணவர்கள் சென்று வருவதில் நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-6-350)

# தனுஷ்கோடியில் கரையொதுங்கிய மர்மப்படகு- உளவுத்துறை விசாரணை

(மன்னார்)

மன்னார் வளைகுடா கடல் பிராந்தியம் அருகே இரண்டாம் மணல் திட்டில் கரை ஒதுங்கிய இலங்கை மர்ம படகு குறித்து உளவுத்துறை கடலோர காவல் படையினர் உள்ளிட்ட பாதுகாப்பு படையினர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தனுஷ்கோடி அருகே இரண்டாம் மணல் திட்டில் இலங்கை கண்ணாடி இலைப் படகு ஒன்று கரை ஒதுங்கியுள்ளதாக கடந்த திங்கட்கிழமை இரவு தனுஷ்கோடி பகுதி நாட்டுப்படகு மீனவர்கள் மெரைன் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். இதையடுத்து அங்கு சென்ற மெரைன் பொலிஸார், உளவுத்துறை மற்றும் சுங்கத் துறையினர் படகை மீட்டு இரவு கரைக்கு கொண்டு சென்றனர்.

படகில் யாரேனும் ஊடுருவினார்களா? அல்லது கடத்தலுக்கு பயன்படுத்த வந்ததா? அல்லது காற்றின் சீற்றத்தில் கரை ஒதுங்கியுள்ளதா? என்பது குறித்து பாதுகாப்பு படையினர் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர்.

படகில் இன்ஜின் பொருத்தப்படும் இடம் சேதமடைந்து உள்ளதாகவும் படகில் மீன்பிடி உபகரணங்கள் இருக்கவில்லை என தெரிவித்த பாதுகாப்பு அதிகாரிகள் மீட்கப்பட்ட படகை சுங்க துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இப்படகு குறித்து இலங்கை பாதுகாப்பு படையினரிடம் விசாரிக்கும் போது படகின் பதிவு எண் புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்தது என்றும் ஆனால் படகு காணாமல் போனதாக மீன் துறை மற்றும் பாதுகாப்பு துறையினருக்கு இதுவரை எந்தப் புகாரும் கிடைக்கவில்லை எனவும் இது குறித்து விசாரிப்பதாகவும் தெரிவித்துள்ளதாக தகவல் தெரிவித்தனர். (5-6-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத்தத்தின்போது

# வடகொரியாவிடம் இருந்து ஆயுதக் கொள்வனவு

## மறுக்கிறது அரசு



(கொழும்பு)

கறுப்புச் சந்தை டொலர்களைப் பயன்படுத்தி வடகொரியாவிடம் இருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்ததாக கூறப்படும் குற்றச்சாட்டை இலங்கை மறுத்துள்ளது.

அத்துடன் கடந்த 31 ஆம் திகதி "கறுப்புச் சந்தை டொலர்களைப் பயன்படுத்தி வடகொரியாவிலிருந்து ஆயுதங்களை வாங்கினோம்" என அமைச்சர் பசில் தெரிவித்ததாக வெளியான செய்தியின் மீது வெளியுறவு அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தனது அமைச்சரவை சகாவுடன் பேசியதாகவும், குறித்த செய்தியில் தமக்கு எதிராகக்கூறப்பட்ட கருத்துக்களை திட்டவட்டமாக மறுத்துள்ளதாகவும் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ கூறியுள்ளார் என்றும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (4)

# ஜனவரியில் மாத்திரம் 82 ஆயிரம் சுற்றுலாவிகள்

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் மாத் திரம் மொத்தமாக 82 ஆயிரத்து 327 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாறு வருகை தந்தவர்களில் அதிகளவானோர் ரஷ்ய நாட்டவர்கள் ஆவர்.

அதன்படி 13 ஆயிரத்து 478 ரஷ்ய நாட்டவர்களும், அவர்க ளுக்கு அடுத்தபடியாக 11 ஆயிரத்து 751 இந்தியர்களும், 7 ஆயிரத்து 774 உக்ரேய்னியர்களும் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

அதே கடந்த ஆண்டு ஜனவரி மாதம் ஆயிரத்து 682 சுற்றுலப் பயணிகள் மாத்திரம் வந்த நிலையில் இவ்வாண்டு முதல் மாதத்தில் இந்த அதிகரிப்பு இடம்பெற்றுள்ளது. (4)

# தேர்தல் காலகட்டத்தில் ஐ.ம.ச பிளவுறும்

## என்கிறார் காணி அமைச்சர்

(கொழும்பு)

சமூக மட்டத்தில் தற்போது தோற்றம் பெற்றுள்ள ஒருசில பிரச்சினைகள் பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு ஒரு போதும் தடையாக அமையாது. தேசிய பாதுகாப்பு மற்றும் தேசியம் ஆகியவற்றை கருத்திற் கொண்டே மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் அரசாங்கத்தை உருவாக்கினார்கள் என காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக மட்டத்தில் தற்போது தோற்றம் பெற்றுள்ள ஒருசில பிரச்சினைகள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வெற்றிக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

நாட்டின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு நாட்டு மக்கள் 2024 ஆம் ஆண்டும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவிப்பார்கள். ஜனாதிபதி தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி மூன்றாக பிளவுபடும்.

ஒரு தரப்பினர் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் பக்கமும், பிறிதொரு தரப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க பக்கமும், மிகுதியான தரப்பினர் ஐக்கிய தேசிய கட்சி பக்கமும் ஒன்றிணைவார்கள் என தெரிவித்தார். (4)

# வழமைக்கு திரும்பியது மின் பிறப்பாக்கி

(கொழும்பு)

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கி வழமைக்கு திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் தேசிய மின் கட்டமைப்பில் 100 மெகா வோல்ட் மின்சாரம் இணைக்கப்படும் எனப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நுரைச்சோலை லக்விஜய மின்னுற்பத்தி நிலையத்தின் 3 ஆவது மின்பிறப்பாக்கி கடந்த டிசெம்பர் 3 ஆம் திகதி முதல் செயலிழந்திருந்த நிலையில், சீர்செய்யப்பட்டு தேசிய மின் கட்டமைப்பில் அண்மையில் இணைக்கப்பட்டது.

இந்நிலையில், தொழில்நுட்ப கோளாறு காரணமாக குறித்த மின்பிறப்பாக்கி நேற்று முன்தினம் மறுபடியும் செயலிழந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# 2 ஆம் ஆண்டு நினைவலைகள்...



அன்னை மடியில்
30 ❖ 10 ❖ 1933

ஆண்டவன் அடியில்
08 ❖ 02 ❖ 2020





அன்னை மடியில்
24 ❖ 06 ❖ 1946

ஆண்டவன் அடியில்
25 ❖ 04 ❖ 2019

**அமரர்.வேலுப்பிள்ளை வாசேஸ்பதிராஜா**

(உரிமையாளர்-யாழ்ப்பாணம் றேடியோ எலக்ரிக்கல்ஸ்)

**அமரர்.வாசேஸ்பதிராஜா விக்கினேஸ்வரி**

ஆண்டுகள் இரண்டு ஆனாலும் ஆறாது உம் நினைவலைகள்
மீண்டெழ நாம் முடியவில்லை மீளாத்துயிலில் நீங்கள் உறங்குவதால்
பாசத்தை ஊட்டி வளர்த்தீர்கள் பாரில் நாங்கள் தலை நிமிர...
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

எமது தாய், தந்தையின் இரண்டாம் ஆண்டு திவசக் கிரியைகள் 03.02.2022 வியாழக்கிழமை நண்பகல் 12 .00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னார்களின் ஆத்ம சாந்தி பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.27, தாமரை வீதி (லோட்டஸ் றோட்)
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

தொ.பே. 077 666 9987, 077 959 0065

குடும்பத்தினர்.

(9990)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் துறையினருக்கும் 5 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு

## ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

**அரச ஊழியர்களுக்கு வழங்கப்படும் 5,000 ரூபாய் கொடுப்பனவை தனியார் துறையினருக்கும் வழங்குவதற்கு அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டுமென கோரி நிறுவனங்களுக்கு இடையிலான ஊழியர் சங்கம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.**

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவைக் கருத்தில் கொண்டு இந்த விடயத்தை பரிசீலிக்குமாறும் கோரியுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் போது ஒட்டுமொத்த தொழிலாளி வர்க்கமும் நன்மைகளைப் பெற வேண்டும் என்றும், தனியார் துறை ஊழியர்களுக்கும் 5,000 ரூபாய் வழங்குவது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அந்தக் கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

நாட்டில் உற்பத்தி செயல்முறையில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் 80 சதவீதத்தை தனியார் துறையை உள்ளடக்கியது.

அவர்களில் 60 சதவீதம் பேர் 25,000 ரூபாவுக்கும் குறைவாகவே வருமானம் ஈட்டுகின்றனர்.

எனவே 5,000 ரூபாய் கொடுப்பனவை வழங்குவதன் மூலம் தனியார் துறை ஊழியர்களுக்கு இடையே உள்ள சிரமங்களை நிவர்த்தி செய்ய முடியும் என்றும் நிறுவனங்களுக்கு இடையேயான ஊழியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது. (4)

# புதிய அரசியலமைப்பு மூலம் ஆட்சியை தக்கவைக்க திட்டம்

## மைத்திரி குற்றச்சாட்டு

(கொழும்பு)

அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுவதற்காக அரசாங்கம் புதிய முடிச்சு ஒன்றை இடுவதற்கு தயாராகியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு குறைந்தது இரண்டரை வருடங்கள் உள்ள நிலையில், அரசாங்கம் புதிய அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு ஆட்சியை தக்கவைக்க முயல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.



பெரும்பாலும் நாட்டில் அடுத்ததாக தேசிய தேர்தல் நடைபெறும் என தாம் எதிர்பார்ப்பதாகவும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார். (4)

# மசகு எண்ணெயின் விலை உயர்வு

(கொழும்பு)

உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை எதிர்பாரா தளவுக்கு அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் வரையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 81 தொடக்கம் 83 டொலருக்கு விற்பனை செய்யப்பட்டதாகவும் தற்போது ஒரு மசகு எண்ணெய் பீப்பாயின் விலை 91 ரூபாய் வரையில் அதிகரித்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இம்மாதத்தில் மசகு எண்ணெய் விலை குறைவடையலாம் என எதிர்பார்க்கப்பட்டிருந்தாலும், விலை அதிகரிப்பு காரணமாக பொருளாதார நெருக்கடியை சந்தித்துள்ள நாடுகள் மேலும் சிக்கலுக்குள் தள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(4)

# காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம் தொடர்பில் அரசாங்கம் கரிசனை

## அமைச்சர் ரமேஷ் பத்திரண

(கொழும்பு)

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான உண்மைகளை கண்டறிந்து தீர்வு காண்பது நீதியமைச்சரின் வடக்கு விஜயத்தில் ஒரு முக்கிய விடயமாக உள்ளது. காணி விவகாரங்கள் உள்ளிட்ட ஏனைய சட்ட நடவடிக்கைகளைப் போன்று காணாமலாக்கப்பட்டோர் விடயம் குறித்து அரசாங்கம் கவனத்தில் கொண்டுள்ளது என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

ஆனால் இந்த விடயத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளில் தலையீடுகள் இருக்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

காணாமல் போனோர் விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் நடமாடும் சேவையின் பிரதான வேலைத்திட்டம் காணிகள் உள்ளிட்ட சட்ட ரீதியான விடயங்களைப்போன்றே காணாமல் போனோர் தொடர்பிலும் அவர்களின் நிலைமை தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதாகும்.

அந்த நடவடிக்கைகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் வழங்கப்படக் கூடிய உச்சபட்ச ஒத்துழைப்பினை [illegible] அவர் குறிப்பிட்டார். (4)

# இன்று ஒரு தகவல்

## விரும்பத்தகாத விடயங்கள்

தன்னம்பிக்கைக் குறைவான வார்த்தைகள்; எள்ளளவும் தேவையற்ற எதிர்ப் பதங்கள்; தீய சொற்கள்; காதில் ஈட்டியைப் பாய்ச்சும் கெட்ட வார்த்தைகள்; அமங்கலமான சொற்கள் ஆகியவற்றைக் கொண்டு வாயே இயந்திரத் துப்பாக்கியென, வார்த்தைகளே குண்டுகளென சரமாரியாகப் பொரிந்து தள்ளும் மனிதர்களைக் காணும்போது மற்றவர்கள் எரிச்சல் அடைகிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்.

ஒரு விடயத்தை வலிமையாகவும் மனத்தில் ஆழமாகப் படும்படியாகவும் சொல்ல இத்தகைய வார்த்தைகள் பயன்படுகின்றன என்பதை மனதிற்கொண்ட பலர் இத்தவறைத் தொடர்ந்து செய்கிறார்கள்.

ஆனால், இவர்களின் நோக்கங்களுக்கு நேர் எதிராக அவை செயற்படுகின்றன என்பதை ஏனோ உணருவதில்லை.

சிலர் எவ்வித நோக்கமும் இன்றி இத்தகைய வார்த்தைகளைப் பயன்படுத்துவது உண்டு.

"அவன் வராவிட்டால் குடியா முழுகிவிடும்?"

"இவனோடு பெரிய இழவாய்ப் போச்சு!" என்பன எல்லாம் இவர்களுக்குச் சகஜமாக வரும்.

இந்த உலகம் மூன்று விடயங்களை வைத்து ஒரு மனிதனை எடை போடுகிறது. ஒன்று அவனது தோற்றம்; இரண்டாவது தகுதி; மூன்றாவது அவனது வார்த்தைகள். வார்த்தைகள் கச்சடாத்தனமாக இருப்பின் மற்ற இரண்டும் எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் எடுபடாமல் போய்விடும்.

நோயாளியைச் சந்திக்கும் நேரத்தில், சாவைப் பற்றிக் கதாகாலட்சேபம் செய்யும் முட்டாள் பிறவிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

திருமணம் போன்ற மங்கல விழாக்களின் போது அபசகுனமான வார்த்தைகளை அள்ளி வீசுபவர்களும் உண்டு.

இதைக்கேள்வியுறும் நபர்களுக்கு, நடந்து கொண்டிருக்கும் மங்கலக் காட்சிகள் மங்கலாகி, அது தொடர்பான சிந்தனையிலேயே செல்ல வேண்டிய விபரீதம் நேரிடும்.

விரும்பத்தகாத சொற்களை நமக்கு எதிராக ஒருவர் பயன்படுத்தும் போதோ, நம் வீட்டுக் குழந்தை அத்தகைய வார்த்தைகளைத் திருப்பிச் சொல்லும் போதோ, நம் மனம் என்ன பாடுபடும் என்பதைப் பலர் உணராமலிருப்பது வியப்பு.

அரைகுறை வேக்காடுகளின் மனவெளிப்பாடுகளே இத்தகைய வார்த்தைகளாகும்.

ஊனமுற்ற உள்ளப் போக்கைக் கண்ணாடியெனத் தெளிவாகக் காட்டுவனவே இத்தகு வார்த்தைகள்.

மன விகாரங்களின் அரைகுறைப் பிரசவமே இத்தகு சொற்கள்.

சுயசிந்தனையும், வளமான மனமும், நல்ல உணர்வுகளும் தோன்ற வேண்டுமானால் இத்தகு சொற்களைத் தவிர்க்க வேண்டும். மற்றவர்களிடத்தில் நம்மைப் பற்றிய உயர்வான எண்ணங்களை அணு அணுவாகச் சேர்த்து உயர்த்தி வைக்கும் நேரத்தில், இத்தகைய சொற்கள் வந்து விழுந்து அவற்றைத் தவிடு பொடியாக்கி விடுகின்றன.

இதன்மூலம் மற்றவர்களிடையே அழிக்க முடியாத தவறான அபிப்பிராயம் நம்மைப்பற்றி, ஏற்பட்டு விடுகிறது.

நம்மையும் அறியாமல் நாம் குறிப்பிடும் இத்தகு சொற்களை இனி விருப்புணர்ச்சியுடன் கவனிக்க வேண்டும். அவற்றை உபயோகப்படுத்த வேண்டிய தேவைதான் என்ன என்று சிந்திக்க வேண்டும்.

தீய விடயங்களுக்கு எப்போதுமே ஒரு தன்மை உண்டு. அதாவது, அதில் கவர்ச்சி அதிகம், வசீகரத் தன்மை மிகுதி.

இந்தக் கவர்ச்சி வலையில் வீழ்ந்து இரையாகக் கூடாது என்று விழிப்புடன் செயற்பட்டால் எளிதில் அவற்றிடமிருந்து விடுதலை பெறலாம்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வழிப்போக்கர்களும் ஒரு பானை கூழும்

மூன்று பேர் காடுகளின் வழியே நீண்ட பயணத்தை மேற்கொண்டனர். அவர்கள் மூவருமே சகோதரர்கள். வெறும் கால்களால் நாள் முழுக்க நடந்து காட்டு வழியில் பயணித்தனர். இரவு நேரம் நெருங்கியது. தங்குவதற்கு ஏதாவது இடம் கிடைக்குமா? என்று தேடத் தொடங்கினர்.

இருள் முழுமையாக அடர்வதற்கு முன் கொலைகார காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளும் இடத்தை அடைய வேண்டும் என்று நினைத்தனர்.

அதிர்ஷ்டவசமாக அவர்களுக்கு தொலை தூரத்தில் இருந்த ஒரு கூடாரம் தென்பட்டது. நன்றாக இருட்டுவதற்கு முன்பாக அந்த கூடாரத்திற்குச் சென்று விட்டார்கள். அந்தக் கூடாரத்தில் வசித்து வந்த மிகவும் வயதான கிழவி அவர்களை வரவேற்றாள்.

கூடாரத்திற்குள் மரக் கட்டைகளை விறகாக வைத்து அடுப்பு மூட்டி ஒரு பானையில் கூழ் காய்ச்சிக் கொண்டிருந்தாள். விருந்தினர்களை உபசரிக்கும் விதமாக, மூன்று சகோதரர்களும் கூழ் சாப்பிட வேண்டும் என்றார் கிழவி. சகோதரர்களில் மூத்தவனாக இருந்தவன் அந்த உணவை மறுத்தான். தனியாக இருக்கும் அந்த வயதான கிழவி தனக்கு மட்டும் தான் சமைத்திருக்கிறாள்.

ஒருவர் மட்டும் தான் அதைச் சாப்பிட முடியும். அதனால் அதில் பங்குக்குச் செல்லாமல் இருக்க வேண்டும் என்று நினைத்து உணவை வேண்டாம் என்று சொல்லி விட்டான். மூத்தவனின் எண்ணத்தை தம்பிகளும் ஏற்றுக் கொண்டனர். கிழவி அவர்களுக்கான இடத்தை ஒதுக்கி படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளுமாறு கூறினாள்.



அன்று இரவு அந்த கூடாரத்தில் அவர்களுக்கு பாதுகாப்பான உறக்கம் வாய்த்தது. ஆனால், மூன்று பேரில் மிகவும் இளையவனாக இருந்தவன் நடுராத்திரியில் பசி தாங்க முடியாமல் விழித்துக்கொண்டான்.

கிழவி சமைத்ததில் ஏதேனும் மிச்சம் இருக்கிறதா என்று பார்ப்பதற்காக அடுப்படிக்குப் போனான். அங்கே இருந்த பானையில் கூழ் அப்படியே குறையாமல் இருந்தது. கிழவி அதை சாப்பிடவே இல்லை என்று அவன் யூகித்துக் கொண்டான். மறுநாள் சாப்பிடுவதற்காக கிழவி அதை தயாரித்து வைத்திருக்கலாம் என்று நினைத்தான்.

ஆனால், அவனுக்கு மிகவும் பசியாக இருந்ததால் அதில் கொஞ்சம் சாப்பிடுவதில் தவறில்லை என்று எண்ணினான். கொஞ்சம் சாப்பிட்டு வைத்து விட்டால் யாருக்கும் தெரியாது என்று நினைத்து கொஞ்சமாக குடித்தான்.

(தொடரும்)

# கம்பராமாயணம்

## பால காண்டம்

03

(தொடர்ச்சி)

குவளைகள் கண் விழித்து நோக்கின. இவ்வாறு மருத நிலம், நாட்டிய அரங்காகப் பொலிவு பெற்று அழகு செய்தது. அன்னப்பறவைகள் தாமரை மலர்களை அடைந்து துயில் கொண்டன; தம் அருகே தம் இளங் குஞ்சுகளை உறங்கச் செய்தன.

சேற்று நிலத்தில் கால் வைத்த எருமைகள், தம் கொட்டிலில் உள்ள கன்றுகளை நினைத்துக் கொண்டு ஊற்று எனச் சுரந்த பாலை இச் சின்னப் பறவைகள் வாய் வைத்து மடுத்தன. தேரைகள் எனப்படும். பசுமை நிறத் தவளைகள் தாலாட்டுப் பாடின அவை அதனைக் கேட்டு மயங்கித் துயின்றன.



சேற்று நிலத்தில் எருமைகள் பாலைச் சொரிந்ததால் நாற்று நடும் வயல்கள் வளம் காட்டின. நெற்பயிர்கள் செழித்தன.

அரங்குகளில் அரிய வையர், ஆடலும் பாடலும் நிகழ்த்தினர். யாழும் குழலும் இணைந்து இசை அரங்குகளில் இனிமை கூட்டின. சதங்கை ஒலிகள், பதங்களுடன் சேர்ந்து, நாட்டிய நங்கையருக்கு நளினம் சேர்த்தன.

இசையும் நாட்டியமும் வசையில் கலைச் செல்வங்களாய்க் கவின் செய்தன. காவியக் கதைகளில் தேர்ச்சி மிக்கவர் சொரியும் கவி அமுதம் செவிநுகர் கனிகள் ஆயின.

### நகர் வளம்

இந் நாட்டின் தலைநகர் அயோத்தி என்னும் மாநகர் ஆகும். செல்வச்சிறப்பால் அழகை நகரையும், இன்பச் சிறப்பால் பொன்னகராம் அமராவதியையும் இது ஒத்து இருந்தது. எழில்மிக்க இந் நகரைப் பொழில் சூழ்ந்த மதில்களும், குழிகள்மிக்க அகழிகளும் சூழ்ந்திருந்தன. மதில்கள் விண்ணைத் தொட்டன. அகழிகள் மண்ணின் அடித்தலத்தை அழுத்தின.

காவல்மிக்க இக் கடிநகரை நால்வகைப் படைகள் காத்துப் போற்றின. மக்கள் தம் உயிர் என மன்னனை மதித்தனர். அவனும் மக்களைக் கண்களை இமை காப்பது போல் காத்துவந்தான்.

ஏழையின் கந்தல், உழைப்பாளியின் ஒரே நிலம் அவர்களின் உடைமைகள்; அவற்றைப் போல அரசன் நாட்டைக் காத்தது, அவன் கடமை ஆயிற்று. பகைவர் காட்டிய பகை, அவன் முன் எரிமுன் வைத்த பஞ்சு ஆகியது. அவர்கள் அஞ்சிப் புறமுதுகிட்டனர்.

மக்கள் பசியும், பிணியும் நீங்க , வளனும் வாழ்வும் பெற்று, அவன் குடை நிழலில் குளிர்ந்தனர். உட் பூசலும் வெளித் தாக்கலும் இன்றி நாட்டில் அமைதி நிலவியது ; ஆக்கம் தழைத்தது ; ஊக்கம் நிலவியது ; செம்மைகள் நிலைத்தன. மாதரார்தம் கற்பின் திறத்தால் நாட்டின் பொற்பு உயர்ந்தது. அறத்தின் ஆக்கத்தால் துறக்கமும் தோற்றது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் யாரையும் வெறுப்பது கொடுமை யானது. மேலும் மற்றவர்கள் இருப்பதைக்கூட கவனிக்காமல் இருப்பது அதைவிடக் கொடுமை யான்து. - பெர்னாட்ஷா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழகத்துத் தலைவர்களே! உடனடியாகத் தலையிடுங்கள்

தமிழகத்து அரசியல் தலைவர்களுக்கு அன்பு வணக்கம்.

இக்கடிதம் அவசரமாக எழுதப்படுகிறது.

எங்கே எம் ஈழத் தமிழர்களுக்கும் தமிழகத்துச் சகோதரர்களுக்குமிடையிலான உறவில் விரிசலும் பாதிப்பும் ஏற்பட்டு விடுமோ என்ற ஏக்கம் எம் இதயத்தைப் பலயீனப்படுத்தி நிற்கிறது.

எங்கள் ஈழத் தமிழினத்தின் ஒரே உறவாக இருக்கக்கூடிய தமிழகம், ஈழவிடுதலைப் போராட்டத்தின் நிலைகளன்.

இந்தியாவின் பிரதமராக இருந்த அன்னை இந்திராகாந்தி அவர்கள் பார்த்தசாரதியை இலங்கைக்குத் தூது அனுப்பியதும் மீட்புப் பணிக்காக சிதம்பரம் கப்பலைத் தந்துதவியதும் மறக்கமுடியாத வரலாற்று நிகழ்வு.

இவ்வாறு அன்னை இந்திராகாந்தி அவர்கள் ஈழத் தமிழ் மக்கள் மீது அன்பும் பாசமும் கொண்டிருந்தமைக்குக் காரணம் தமிழகத்து மக்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆம், இலங்கையில் தமிழர்களுக்கு நடக்கின்ற நிட்டூரம், தமிழக மக்களைச் சொல்லொணாத் துன்பத்துக்கு ஆளாக்கியுள்ளதென்பதை அன்னை இந்திரா காந்தி உணர்ந்து கொண்டார்.

எனவே ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுவதன் மூலமாகவே தமிழக மக்களின் வேதனையைத் தணிக்க முடியும் என்று கருதிய தன் காரணமாகவே ஈழத் தமிழர்களைக் காப்பாற்றும் பணியை அன்னை இந்திரா காந்தி அவர்கள் மேற்கொண்டிருந்தார்.

தவிர, தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் எங்கள் மீது கொண்டிருந்த பற்றையும் பாசத்தையும் எடுத்துரைப்பதற்கு மனித மொழி ஏது?

இவையெல்லாம் கடந்து 2009ஆம் ஆண்டு நடந்த தமிழின அழிப்புக்கண்டு துவண்டு போன எங்கள் தமிழக உறவுகள்; தங்கள் உடலை தீயில் ஆகுதியாக்கி ஐயகோ! எங்கள் ஈழத்துத் தமிழ்ச் சகோதரர்களைக் காப்பாற்றுங்கள் என்று கதறிய அந்தத் தியாகத்தை நினைக்கும்போதெல்லாம் கன்னத்தின் ஓரங்கள் நனைந்து கொள்ளும்.

ஓ! எங்களுக்காக தன்னுயிரை யாக வேள்வியில் ஆகுதியாக்கிய சகோதரன் முத்துக்குமாரனை மறக்க முடியுமா என்ன?

அன்புக்குரிய தமிழகத்துத் தலைவர்களே! தமிழக மீனவர்கள் கடல் தாண்டுவதை தடுத்து நிறுத்துங்கள். நீங்கள் நினைத்தால் அதனை உடனடியாகவே செய்ய முடியும்.

உங்கள் தலையீடு ஒன்றுதான் தமிழ் உறவுகளின் ஒற்றுமையைக் காப்பாற்றும் என்பதால், தாமதமின்றி தலையிடுங்கள்.

தமிழக மீனவர்கள் கடல் எல்லை தாண்டுவதைத் தடுத்து நிறுத்துங்கள்.

# பொலிஸாரின் தவறான செயற்பாடுகள் தொடர்பில் என்னிடம் தெரியப்படுத்தலாம்

## யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள் தொடர்பில் பொது மக்கள் ஏதேனும் முறைப்பாடுகளை ஊடகவியலாளர்களுக்கு தெரியப்படுத்தினால் அது தொடர்பில் எந் நேரமும் தன்னைத் தொடர்பு கொள்ள முடியும் என யாழ். மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகே தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபரிடம் யாழ். மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் பொலிஸ்மா அதிபரின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

யாழ். மாவட்டத்தில் உள்ள சில பொலிஸ் நிலையங்களில் பொது மக்கள் முறைப்பாடு செய்ய முற்படும்போது அவற்றை முறைப்பாட்டு புத்தகத்தில் பதிவு செய்யாமல் சாதாரண புத்தகம் ஒன்றில் பதிவு செய்வது, முறைப்பாடு பதிவு செய்யும்போது முறைப்பாட்டாளர் கூறிய விடயங்களுக்கு மேலதிகமாக சில விடயங்களை முறைப்பாட்டு புத்தகத்தில் சேர்ப்பது தொடர்பில் மாவட்ட பொலிஸ் அதிபருக்கு கூறப்பட்டது.

அதற்கு பதிலளித்த பிரதிப் பொலிஸ்மா அதிபரும் முறைப்பாட்டாளர் தான் வழங்கிய விடயங்கள் அனைத்தும் முறைப்பாட்டு புத்தகத்தில் இருக்கிறதா என்பதை சரியாக வாசித்தபின் கையெழுத்திட முடியும். அவ்வாறு முறைப்பாட்டு புத்தகத்தில் இடம்பெறவில்லை எனில் அதில் கையெழுத்து இட வேண்டிய தேவையில்லை. அது தொடர்பில் குறித்த பொலிஸ் நிலையத்தில் அல்லது மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரமுடியும்.

நான் யாழ். மாவட்டத்தின் பிரதிப் பொலிஸ்மா அதிபராக இருக்கின்ற நிலையில் யாழ். மாவட்ட பொலிஸாரின் தவறான செயற்பாடுகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் என்னிடம் நேரடியாகவோ அல்லது வாட்ஸ்அப் இலக்கத்தின் ஊடாக முறைப்பாடுகளை எந்த நேரத்திலும் வழங்கலாம்.

பொலிஸார் தொடர்பில் பொதுமக்களின் முறைப்பாடுகள் பொலிஸாருக்கு கிடைப்பதை விட ஊடகவியலாளர்களுக்கே அதிகம் கிடைக்கிறன.

ஆகவே பொலிஸ் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு எம்மால் முடிந்த வரை சேவையை வழங்குவதற்கு தயாராக உள்ளேன் என அவர் மேலும் தெரிவித்தார்.

(4.5.33)

## நாட்டில் நேற்று மேலும் 1,156 பேருக்கு கோவிட்

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 1,156 பேருக்கு கோவிட்-19 தொற்று உறுதியாகியுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில் வெளிநாடுகளிலிருந்து வருகைதந்த 5 பேர் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட்-19 தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 613, 478 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## இந்திய வங்கிகளில் புலிகளின் கணக்குகள்

### சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கணக்குகள் இந்திய வங்கிகளில் இருப்பதை இந்தியத் தேசிய புலனாய்வு அமைப்பு கண்டறிந்துள்ளதாக தென்னிலங்கை சிங்கள ஊடகமொன்று பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளது.

மும்பையில் உள்ள விடுதலைப் புலிகளின் வங்கிக் கணக்கில் இருந்து பணம் எடுக்க முயன்ற கனடாவைச் சேர்ந்த மேரி பிரான்சிஸ் என்ற பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வங்கிக் கணக்குகள் டென்மார்க் மற்றும் சுவிஸ் விடுதலைப் புலிகளின் அனுதாபிகளாலும் பயன்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்திய வங்கிகளில் விடுதலைப் புலிகளின் பணம் இருப்பது இதுவரை தெரியவரவில்லை எனவும் அந்த ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## சத்திய தரிசனம்



### ஒழுக்கம் அறிவார்ந்த வாழ்க்கை அடையாளமானது.

- மனிதனுக்கு மிகப்பெரிய பயம் உண்டென்றால் அது கடளின் அன்பை இழக்கும் பயம் ஆகும்.
- அதிகபடியான உணவின் முடிவு மனதில் மனச்சோர்வாக இருக்கும்.
- ஒருவருக்கு தாய்மொழி பேசுவதை போன்றதொரு இனிப்பு உள்ளதோ.
- அனைத்து உயிரினங்களின் காதல் உள்ளது அதுவே போதும்.
- பேரிடர் அணுகும் போது, பாகுபாடு விலகிவிடும்.
- மனிதனின் நினைவில் இருந்து வரையப்பட்ட ஒவ்வொரு அனுபவத்தின் விளைவும் அவனது உடல் நலத்தில் காணப்படும்.
- ஒரு மனிதனின் நல்வாழ்வை பொறுத்த அவரது பட்டம் மனநிறைவு பொறுத்தது.
- கடவுள் அனைத்து பெயர்களிலும் மற்றும் அனைத்து வடிவங்களிலும் உள்ளது.
  குருவை பின்பற்றி, தீயவையோடு எதிர்கொண்டு, இறுதிவரை போராடி, விளையாட்டை முடிவுக்கு கொண்டு வா
- உண்மையான சந்தோஷம் உங்களிடமே உள்ளது.
- படைப்பில் அனைத்தும் பொருட்களும் மாறுதலுக்கான சட்டத்திற்கு உட்பட்டவை. அதில் மனிதனும் கூட இந்த சட்டத்திற்கு உட்பட்டு இருக்கிறான்.
- ஒன்றை துறக்கப்படும் போது தீய சக்திகளுக்கு எதிராக போராடி மனதில் சரிபார்க்கபடுகிறது.
- நாளை ஆசிரியர்கள் இன்றைய மாணவர்கள்.
- கடவுள் பேசவேண்டுமென்பதில்லை, கீழ் வரவேண்டும், மேலே செல்லவேண்டும் என்பதில்லை. அவர் எல்லா இடங்களிலும் நிறைந்துள்ளார்.
- நீ எதை நினைக்கிறாயோ அதை பேசு, நீ எதை பேசுகிறாயோ அதை செய்.
- ஒரு ஞானமுள்ள பிழையற்ற அடையாளம் எது? அது காதல், அனைத்து மனித குலத்திற்கும் உரியது.
- அவனவன் விதி அவனின் சொந்தக் கரங்களில் உள்ளது.
- எப்போதெல்லாம் மற்றும் எங்கெல்லாம் நீ கடவுளுடன் தொடர்பில் இருக்கிறாயோ அதுதான் தியானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ.து)
# பூநகரி நாகதேவன் துறை வீதி, வாடியடி, பூநகரி

## பதவி வெற்றிடங்கள்

எமது சங்கத்தில் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரியிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி :- பொதுமுகாமையாளர் சம்பளக் குறியீடு - 101/08
சம்பளஅளவுத்திட்டம் :- 18425-230 X -250X10 = 23225.00 (சு.நி 02/2020ன் படி) வெற்றிடம் -01

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-**

அ) கூட்டுறவு ஊழியர் 9 ஆவது சம்பளத்திட்ப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை/ மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் /அதற்குச் சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல்/ வியாபாரப் புள்ளிவிபரவியல்/ வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்./ இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் /முகாமைத்துவம்/ வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப்பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்/ க.பொ.த.உயர்தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப்பதவியொன்றில் ஆகக்குறைந்தது 05 ஆண்டுகால அனுபவம்.

2. பதவி :- கணக்காளர் சம்பளக் குறியீடு- 104/09
சம்பள அளவுத்திட்டம்:- 18010-220X10-230X10= 22510.00(சு.நி 02/2020ன் படி) வெற்றிடம் -01

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-**

அ) கூட்டுறவு ஊழியர் 10 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் கணக்காளர்/ உள்ளகக் கணக்காய்வாளர்/ கணக்குப்பதிவாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்./கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத்திட்ட பதவியில் உள்ளக கணக்காய்வாளர்/ கணக்குப்பதிவாளர் கணக்கு அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) இலங்கைத்தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/. இதற்கு சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால்/ தேசிய கூட்டுறவு அபிவிருத்த நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகால அனுபவம்./ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்./ க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்./ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வு தொடர்பான பதவியொன்றில் 04 ஆண்டுகால அனுபவம்

3. பதவி :- உள்ளக கணக்காய்வாளர். சம்பளக் குறியீடு-105/10
சம்பள அளவுத்திட்டம்:- 17605-198X10-220X10= 21785.00(சு.நி 02/ 2020 ன் படி) வெற்றிடம் -01

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-

அ) கூட்டுறவு ஊழியர் 11 ஆவது சம்பளத் திட்டப் பதவியில் முகாமை/ மேற்பார்வை நிலைப்பதவியில்/நிறைவேற்றாளர் நிலைப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை/மேற்பார்வை நிலைப்பதவியில்/ நிறைவேற்றாளர் நிலைப்பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியலிலான டிப்ளோமா/ இதற்குச் சமனான தகைமை/ மாகாண கூட்டுறவுப்பயிற்சி நிறுவனத்தினால்/தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தினால் (NICD) நடாத்தப்பட்ட கூட்டுறவு டிப்ளோமா பரீட்சையில் சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்./அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/ கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை தொடர்பாக ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்
க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உள்ளிட்ட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வு துறையில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்./அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் கணக்கியல்/கணக்காய்வுக் களங்களில் மேற்பார்வை தொடர்பாக ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம்

4. பதவி :- கணக்கு பதிவாளர். சம்பளக் குறியீடு- 215/12
சம்பளஅளவுத்திட்டம்:- 16780-150X10-165X10 = 19930.00(சு.நி 02/2020ன் படி) வெற்றிடம் -01

அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-

அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கணக்குப்பதிவாளர்/ வெளிக்கள உத்தியோகத்தர்/எழுதுநர்/காசாளர் பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் எழுதுநர்/காசாளர் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி./ க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தி.

5. பதவி :- களஞ்சிய பொறுப்பாளர் சம்பளக் குறியீடு-202/11
சம்பள அளவுத்திட்டம்:- 17190-170X10-185X10= 20740.00(சு.நி 02/2020ன் படி) வெற்றிடம் -01

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-**

அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர்/ கொள்வனவு உத்தியோகத்தர்/கிளை மேற்பார்வையாளர்/கிளைமுகாமையாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் வழங்கல்/களஞ்சிய முகாமை/சந்தைப்படுத்தல் முகாமை தொடர்பான டிப்ளோமா சித்தி.

அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்./ க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில்/அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்

6. பதவி :- கிளைமேற்பார்வையாளர் சம்பளக் குறியீடு -207/11
சம்பளஅளவுத்திட்டம்:- 17190-170X10-185X10= 20740.00(சு.நி 02/2020ன் படி) வெற்றிடம் -01

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:-**

அ) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர் /கிளைமேற்பார்வையாளர்/கிளைமுகாமையாளர் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/ கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்./அங்கீகரிக் கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 01 ஆண்டுகால அனுபவம்/ க.பொ.த.உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுட னான சித்தியுடன் கூட்டுறவு நிறுவன மொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/ அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்

- **வயது எல்லை- 18-45 (கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிவோருக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)**
- **விண்ணப்ப முடிவுத்திகதி 21.02.2022 வரையாகும்**

**ஏனைய விபரங்கள்:-**

❖ கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கமைய ஊக்குவிப்பு கொடுப்பனவுகளும் மற்றும் படிகள் வழங்கப்படும்.

❖ சங்கம் கோருகின்ற றொக்கபிணை, ஆதனபிணை என்பவற்றினை தெரிவு செய்யும் பணியாளர் செலுத்துதல் வேண்டும்.

❖ சங்கங்களில் பணிபுரிவோர் தமது விண்ணப்பங்களை தமது சங்கத்தின் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

❖ விண்ணப்பதாரிகள் சங்கத்தின் தலைமை அலுவலகத்தால் விநியோகிக்கப்படும் விண்ணப்பப்படிவத்தை பெற்று பூரணப்படுத்தி இப் படிவத்துடன் பிறப்புச்சான்றிதழ், தகைமைச் சான்றிதழ்களின் போட்டோ பிரதியினையும் இணைத்து விண்ணப்பிக்கும் பதவியின் பெயரையும் குறிப்பிட்டு தலைவர் பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், நாகதேவன் துறை வீதி, வாடியடி, பூநகரி என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

❖ ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பம் அனுப்பி வைக்க வேண்டும்.

❖ சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

❖ முழுமையாக பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்கள், தகுதி இல்லாத விண்ணப்பங்கள், முடிவுத் திகதிகளின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் இரத்துச் செய்யப்படும்.

தா.அரியரத்தினம்,
தலைவர்
பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
பூநகரி

(C-3698)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19 பேர்...

நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 15,492 ஆக உயர்வடைந்துள்ளது. (ம)

## உயர்தரப்...

வரும் மார்ச் 07 ஆம் திகதி வரை விடுமுறை வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

முன்னர் பரீட்சை நடைபெறும் காலத்தில் ஆரம்பப் பிரிவு வகுப்புகள் நடைபெறும் என அறிவித்திருந்த நிலையில் தற்போது அத் தீர்மானம் மீளப் பெறப்பட்டுள்ளது. (ம)

## எழுத்து...

வித்துள்ளனர்.

நேற்றைய தினம் பருத்தித்துறை - சுப்பர்மடம் பகுதியில் போராட்டத்தை முன்னெடுத்த மீனவர்கள் நடாத்திய ஊடக சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பினால் நமது கடல் வளம் அழிக்கப்படுவதுடன் சொத்துக்களும் நாசமாக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது இது உயிர்களையும் பறித்து எடுத்திருக்கின்றது.

இந்நிலையில் இந்த அராஜகத்திற்கு நிரந்தர முடிவு காணும் வகையில் மீனவ சமுதாயத்தில் இருந்து பொன்னாலை தொடக்கம் பருத்தித்துறை வரை சாலை மறியல் போராட்டத்தையும் கடற்றொழில் மறிப்பு போராட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றோம்.

இப்போராட்டத்தை பாதிக்கப்பட்ட மீனவ சமுதாயம் ஒன்றிணைந்து மக்கள் போராட்டமாக முன்னெடுத்து வருகின்றது. இதற்கு சமாசத்திற்கும் மாவட்ட சம்மேளனத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை.

மக்களால் தொடரப்படும் இந்த போராட்டமானது மீனவர்களுக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை தொடரும். மேலும் போராட்டத்தை நடத்துவதற்கு பொதுமக்களிடம் ஆதரவு கோரி நிற்கின்றோம்.

இப் போராட்டத்திற்கு வர்த்தக சங்கங்கள், போக்குவரத்து அமைப்புகள், பொது அமைப்புகள் ஆதரவு வழங்குமாறு பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கிறோம் என தெரிவித்துள்ளனர். (ம -33,60)

## வீதி மறியல்...

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை, சுப்பர் மடம் பகுதியில் மீனவர்கள் முன்னெடுத்துள்ள வீதி மறியல் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.

இந்திய மீன்பிடிப் படகுகளின் அத்துமீறலைக் கண்டித்தும் வத்திராயன் பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட 2 மீனவர்களுக்கு நீதி கோரியும் இந்தப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இந்த போராட்டத்திற்கு பல தரப்பினரும் தங்களது ஆதரவை அளித்து வருகின்ற நிலையில் முல்லைத்தீவு மாவட்ட மீனவ அமைப்புகளும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் நேரடியாக போராட்டக் களத்துக்கு வந்து ஆதரவளித்துள்ளனர். (ம-33,60)

## மதுபான...

நாளைய தினம் இறைச்சிக் கூடங்களை மூடுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் என். எச். எம். சித்ரானந்தா பணிப்புரை விடுத்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாளை நாடளாவிய ரீதியில் உள்ள மதுபானசாலைகளும் மேலதிகமாக அனுமதி பெற்ற ஏனைய அனைத்து மதுபான விற்பனை நிலையங்களும் மூடப்பட வேண்டும் என்றும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம)

## பேச்சுவார்த்தை...

சேனாதிராசா, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று சுப்பர்மடம் பகுதியில் மீனவர்கள் போராட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அண்மைக் காலமாக வடபகுதி கடலிலே எங்களுடைய கடற்றொழிலாளர்கள் தங்களுடைய இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான கடற்றொழில் உபகரணங்களை மாத்திரமல்ல தங்களுடைய இன்னுயிர்களை [illegible] ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பாக இந்தியாவிலிருந்து எல்லை தாண்டி வருகின்ற ரோலர் இழுவை மடி படகுகள் மோதி பாரிய சேதம் ஏற்பட்டிக்கிறது.

தமிழக அரசும் வடமாகாணத்திலே இருக்கக்கூடிய சங்கங்கள் உட்பட மக்கள் பிரதிநிதிகளும் இது தொடர்பில் பேச வேண்டும். இப்பொழுதுகூட இரண்டு தினங்களுக்கு முன்னர் முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் உடனடியாக பேச்சுவார்த்தை நடாத்தி இந்தமாதிரியான பதட்டங்களை குறைக்க முன்வருமாறு கேட்டிருப்பதாக எனக்கு செய்தி அனுப்பியிருக்கிறார்கள்.

இப்பொழுதுகூட அவரது உதவியாளர் வழக்கறிஞர் ராதா கிருஷ்ணன் இன்றிரவு (நேற்று) தமிழக முதலமைச்சருடன் பேசிவிட்டு செய்தி தருவதாக கூறியுள்ளார்.

இலங்கை அரசு இதில் அக்கறை காட்டும் என நாங்கள் எதிர்பார்க்க முடியாது. இந்திய மத்திய அரசுக்கும் ஏனோதானோ நிலைவரம்தான். இதிலே அவன் செத்தாலும் இவன் செத்தாலும் தமிழர்கள் என்ற நிலைமை இருக்கிறது.

தற்போது விலைவாசி அதிகரித்திருக்கும் நிலையில் பனையால் விழுந்தவனை யானை மிதிப்பதாக உள்ளதாகவும் உடனடியாக இந்த பிரச்சினை தீர்க்க வேண்டும். அதற்கான முழு முயற்சிகளை உடனடியாக எடுப்போம் என்றார். (ம-33,60)

## இந்...

மறித்து வீதியில் இந்திய மீனவர்களால் அறுத்து நாசமாக்கப்பட்ட வலைகளையும் போட்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனால் யாழ்ப்பாணம் - பருத்தித்துறை பிரதான வீதியின் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டிருந்ததோடு பாடசாலை மாணவர்கள் மாத்திரம் வீதியினால் செல்லுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

போராட்டம்இடம் பெற்ற பகுதியில் பொலிஸார் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டு கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-33,60)

## அன்...

திநிதி ஹனா சிங்கர் ஹம்டி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தனது உத்தியோக பூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் ஐ.நா வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர்,

"பன்னிரண்டு வருடகாலத் துன்பம்இன்னமும்ஆறாமல் இருக்கின்றது. தமது அன்பிற்குரியவர்களுக்கு என்ன [illegible] அறிந்துகொள்வதற்கான உரிமையும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்யுமாறு வலியுறுத்துகின்ற உரிமையும் காணாமல்போனோரின் குடும்பத்தினருக்கு உள்ளது. தமது காயத்தை ஆற்றுவதற்கான தேவை அவர்களுக்கு இருக்கின்றது.

இவ்வாறானதொரு பின்னணியில் உண்மையையும் நீதியையும் நிலைநாட்டிக்கொள்வதற்கான அவர்களது போராட்டத்திற்கு சமூகம் ஆதரவளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (ம)

## தமிழர்களின்...

காணிகளில் கடந்த நவம்பர் மாதம் காலபோக செய்கையை மேற்கொள்ள காணி உரிமையாளர்கள் முற்பட்டவேளை அவ்விடத்துக்கு வந்த குருந்தூர் மலையில் அமர்ந்துள்ள கல்கமுவ சாந்தபோதி நாயக்க தேரர் என்ற பௌத்த பிக்குவும் தொல்லியல் திணைக்களத்தினரும் மேற்படி காணிகள் அனைத்தும் குருந்தூர் மலை புண்ணிய பௌத்த பூமிக்கு சொந்தமான தொல்லியல் நிலங்கள் எனவும் இப்பகுதியில் இனிமேல் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது எனவும் அவ்வாறு ஈடுபட்டால் கைது செய்வோம் எனவும் அச்சுறுத்தியுள்ளதாக காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 02/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1206
துலாம் 7 3 0 0 4 2

மெகா பவர்
திகதி 02/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1014
X 07 01 72 78 79

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.02.02
சீட்டிழுப்பு இலக்கம் 007
சிம்மம் 04 05 39 57 சிம்மம்

மஹஜன சம்பத
திகதி 2022/02/02
சீட்டிழுப்பு இலக்கம் 4666
N 8 0 9 4 3 8

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 02.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2961
K 32 34 36 74

தன நிதானய
திகதி - 2022.02.02
சீட்டிழுப்பு இலக்கம் - 696
F 04 06 51 75

அத கோடிபதி
கிழமை: புதன்கிழமை
சீட்டிழுப்பு இல: 1489
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 02.02.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,313,200
17 60 62 67 E

சனிதா
சீட்டிழுப்பு இல: 3804
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 02.02.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,840,300
23 26 31 70 X

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1643
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்புத் 02.02.2022
தினம் புதன்
O 09 48 55 69
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 57,473,254/=

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,785,179/=
திகதி 02.02.2022
வெற்றி வாரம் 3355
வர்ணம் பச்சை
06 08 45 61 துலாம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,841,879/=

12 லக்ன
E 01 23 44 56 66
சீட்டிழுப்பு வாரம் 819
வர்ணம் பச்சை
திகதி 2022.02.02 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 209,538,421/-

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1808
சீட்டிழுப்பு திகதி 02.02.2022
28 53 56 62 O
எதிர்வரும் சுப்பர் பரிசுப்போதி ரூ. 30,616,268/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KBK கந்தர்மடம்/ கொழும்புத்துறை
A/L கணக்கீடு A/L 2022, A/L 2023
தரம் 10, 11 வணிக்மும் கணக்கீட்டுக்கல்வியும்
Mr.K.BALAKAJEN (9926)
உங்கள் அனுமதிகளுக்கு:- 077 216 8884

ஊர் கோழி குஞ்சுகள்
1 நாள் குஞ்சு - 90/=
1 கிழமை - 115/=
1 மாதம் - 300/=
விராத்து குஞ்சுகள், வான்கோழி குஞ்சுகளும் கிடைக்கும். (9959)
077 332 2433
பண்ணாகம்

றோயல் அக்கடமி
ROYAL ACADEMY
நாவலர் றோட், நல்லூர். அரசடி றோட், யாழ்ப்பாணம்.
தரம் 6 முதல் O/L வரை
கல்வியாண்டு - 2022
தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் (9969)
ஆரம்பம் - 05.02.2022, சனிக்கிழமை
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றது.

அகரம் உயர் நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
காங்கேயன் துறைச்சாலை
மல்லாகம் கொக்குவில்
புதிய கல்வியாண்டு - 2022 ஆரம்பம்
தரம் 06 - O/L
வரையான தமிழ் மொழி மூலம்
English medium வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
(22.01.2022 இல் புலமைப்பரிசிற் பரீட்சை
எழுதிய மாணவர்களிற்கான புதிய தரம் 06 தமிழ்மொழி மூல
English medium வகுப்புக்கள் ஆரம்பம்
04.02.2022 [வெள்ளிக்கிழமை]
வளர்பிறை விநாயக சதுர்த்தி அன்று காலை 6.35 - 8.05
வரையான சித்தயோக நன்நாளன்று
அனுமதிகளை 26.01.2022 மாலை 02 மணியில் இருந்து
பெற்றுக்கொள்ளமுடியும். (9893)
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
இயக்குநர்

EVERSHINE EDUCATION CENTRE
THINK GLOBALLY ACT LOCALLY
புதிய கல்வியாண்டு - 2022
ICT 7,8,9 10,11
S.Gowsigan
(B.Tech - ICT)

| | | |
|---|---|---|
| தரம் - 10 (தமிழ் மொழி மூலம்) 04.02.2022 7.00 am - 8.00 am | தரம் - 10 (ஆங்கில மொழி மூலம்) 04.02.2022 8.00 am - 9.00 am | தரம் - 11 (ஆங்கில மொழி மூலம்) பிரிவு I சனி, ஞாயிறு 4.00 pm - 5.00 pm |
| தரம் - 11 (தமிழ் மொழி மூலம்) பிரிவு I சனி, ஞாயிறு 3.00 pm - 4.00 pm | தரம் - 11 (தமிழ் மொழி மூலம்) பிரிவு II புதன் 3.00pm - 4.00pm வெள்ளி 6.15pm - 7.15 pm | தரம் - 11 (ஆங்கில மொழி மூலம்) பிரிவு II திங்கள், வெள்ளி 3.00 pm - 4.00 pm |

* 7-9 வரையான தரங்களுக்கு வகுப்புக்கள் தனித்தனியாக இடம்பெறும்
* 7-9 வரையான தரங்களுக்குரிய நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்
* நேர அட்டவணை, அனுமதிகளுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்

தரம் 11 இற்கு மட்டுப்படுத்தப்பட்டளவில் அனுமதிகள் வழங்கப்படுகின்றன
(10001)
123 பிறவுண் வீதி யாழ்ப்பாணம் 0773784053

மணமகள் தேவை
1977, இந்து கௌரவ குடும்பம். திருவோண நட்சத்திரம். 56 ½ கிரக பாவம் உடைய அரச உத்தியோக மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (10013)
077 728 6050

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (9995)
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

# யாழில் நாளை கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சுதந்திர தினமான நாளை வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்.நகரில் கவனயீர்ப்புப் பேரணி இடம்பெறவுள்ளது.

நாளை முற்பகல் 10 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகும் கவனயீர்ப்புப் போராட்டம் பேரணியாகச் சென்று யாழ்.முனியப்பர் ஆலய முன்றலில் நிறைவடையும் என யாழ். மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பின் இணைப்பாளர் மதியமுதன் சுகந்தினி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய கால சூழலில் தமிழ் மக்களின் சுதந்திரத்தை நசுக்கி எம்மை அடிமைகளாக வைத்திருக்கக் கூடிய இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ் மக்களாகிய நாம் புறக்கணிக்கின்றோம். இலங்கையின் சுதந்திர தினம் தமிழர் வரலாற்றில் கரிநாளாகவே உள்ளது. இந்த உண்மையைச் சர்வதேசம் புரிந்து கொண்டு இலங்கையை சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்குத் துணை நிற்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

(ம-18,33)

புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
யாழ். மாவட்ட பிரபல ஆசிரியர்களின் வழிகாட்டலில்.... (9998)
கல்வியாண்டு - 2022
தரம் 1 முதல் O/L வரை
தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புகள்
ஆரம்பம் : 05.02.2022 சனிக்கிழமை
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
☎-077 459 8440

கணிதம்
புதிய கல்வியாண்டு - 2022
தரம் 6 இற்கான புதிய பிரிவு
ஆரம்பம் : 04.02.2022 வெள்ளி
காலை 7.00 மணி (10003)
ஆசிரியர் திரு T.அற்புதராஜா
இல.202, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
077 722 2478

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-3679)
0768226240 DHL

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9986)
076 825 7716 (ஆகாஸ்)

தீபம் கல்வி நிலையம்
(இல.11, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்)
கல்வியாண்டு - 2022
தரம் 6 முதல் O/L மற்றும் A/L வரை
தமிழ், ஆங்கில மொழிமூல வகுப்புகள்
தரம் 6 ஆரம்பம்:-05.02.2022 (சனி மாலை 4 மணி)
அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (10009)
தொடர்புகளுக்கு - 077 224 7781
'தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சிமிகு எதிர்காலம்'

பெண் வேலையாட்கள் தேவை
மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை.
வயது எல்லை : 18 தொடக்கம் 35 வரை.
வேலை நேரம் : காலை 7.30 மணி - மாலை 5 மணி வரை.
மாத வேதனமாக 17,000/= - 30,000/= வரை வழங்கப்படும்.
தொடர்பு (9993)
074 049 0003

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் நுணாவில் வைரவர் கோயில் சந்தியில் இருந்து மட்டுவில் செல்லும் பிரதான வீதி முகப்புடன் 18 பரப்புக் காணி (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.
(A9 வீதியிலிருந்து 150m தூரத்தில்) (10006)
077 288 0152
077 911 6983

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.